சு. வெ. தங்கசாமி,
5, மந்தவெளிசந்து, மயிலை

தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணு | வெளிநாடு மூன்றணு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 2 | சென்னை 24—4—56 செவ்வாய்க்கிழமை | இதழ் 45

சேவல் கூவிற்று! சினந்தனள் தலைவி

"கடலே இரையாதே
காற்றே நீ வீசாதே
நிலவே எரியாதே - என்
நீலவண்டார் வருமட்டும்"

என்று, பிரிவுத் துயருக்கு ஆளான ஒரு தலைவி கடலுக்கும், நிலவுக்கும் ஆணையிட்டதாக, இலங்கை மட்டக்களப்புப் பகுதியில் வழங்கும் நாட்டுப் பாடல் ஒன்று சித்திரிக்கிறது.

"இந்தக் கடலுக்கு உறக்கமிருக்காதா? இந்த இரைச்சல் அடங்காதா? ஏன்? நான் வளர்த்த கோழிகூடவா இப்படி என்னை வதைக்க வேண்டும்? கோழியின் வாயில் என்ன மண்ணு அடைத்துக்கொண்டது?"

"ஆழிவாய்ச் சத்தம்
அடங்காதோ யான்வளர்த்த
கோழிவாய் மண்கூறு
கொண்டதோ?........"

என்று, பிரிவுத் துயருக்கு ஆட்பட்ட தலைவி பேசுவதாகத் 'தனிப்பாடல்' ஒன்றுண்டு.

இரவு நீடிப்பது கண்டு, "கோழி வாய் மண்கூறு கொண்டதோ?" என்று கேட்கும் தலைவியர், தம் தலைவனோடு கூடியிருக்கும்போது, இரவுப் பொழுது நீடிக்க வேண்டும்; பொழுது புலர்ந்துவிடக்கூடாது; கோழி கூவிவிட்க் கூடாது என்று எண்ணுவர். அப்போது, கோழி கூவிவிட்டது என்றல், இவர்கள் அந்தக் கோழியைச் சபிப்பது -திட்டுவது இருக்கிறதே அடேயப்பா! ரொம்ப மோசமானது.

"எப்போதுமே
கூவிக்கொண்டிருக்கும்
கோழியைக்
கொல்லுங்கள்;
பொழுது புலர்வதை
முன்னரே தெரிவிக்கும்
கோழியைச்
சுட்டுத் தள்ளுங்கள்;
அடுத்த ஆண்டு
விடியும் வரை
இரவு தடைப்படாம
லிருக்கும்படியாக"

என்று, சீனுவின் தென் பகுதியிலே மிகவும் பிரசித்திபெற்ற 'நாட்டுப்பாடல்' ஒன்று வழங்குகிறது. ஆம்! தலைவனோடு, கூட்டுக் களியில் தான் பெறும் இன்பம் தடைப்படக் கூடாது; இன்ப இரவு நீடிக்க வேண்டும் என்று அவள் எண்ணினுள். அவள் மட்டுமென்ன? இவ்வாறு எண்ணுவது அவளது நிலையிலுள்ள அனைவருக்குமே பொதுவானது.

தமிழ்நாட்டுத் தலைவி ஒருத்தி. அவள் தலைவன் வரையாது வழங்கும் வள்ளல். அவனிடத்துப் பொருள் கேட்பவருக்கு அவன் பொருள் வழங்குவானும்.

'தாஎன் றவர்க்குத்
தருமென் தலைவன்'

என்று தலைவனின் வள்ளண்மையை, கொடைத் திறத்தை அவள் பேசுகிருள். அத்தகைய தலைவனிடம், அவள் விரும்பிப் பெறுகின்ற-அவனும் விரும்பி வழங்குகின்ற 'இன்பம்' எத்தகையதாக இருக்கும்!

அவள் தன் தலைவனெடு கூடி இன்பக் கேளிக்கையில் ஈடுபட்டு, அந்த இன்பமும், இன்ப இரவும் நீடிக்கவேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கும் நேரத்திலே-ஆம்! பொழுது புலரப் போகிறது என்பது கூடத் தெரியாமல் தம்மை மறந்து இன்பமடைகிற அந்த நேரத்திலே, பொழுது புலர்வதற்கு முன் கூட்டியே கூவும் வழக்கமுடைய அவர்களது கோழி கூவத் தொடங்கிவிட்டது! சரி. கோழி கூவிவிட்டது. அதனுல் என்ன? அடுத்த இரவு இருக்கிறது என்ரு அந்த நேரத்திலே எண்ணத் தோன்றும்?

கோழிமீது அடங்காதகோபம்! அது அழகியதொரு வருணச் சேவல். எதுவாக இருந்தால் தானென்ன? சினந்த தலைவி பிறகு தன் தோழியிடம் இதைக் கூறி ஆறுதல் பெற விரும்பிச் சொல்லுகிருள் பாருங்கள்:

"எங்கள் இன்ப இரவைப் போவென்று சொல்லிச் சிறகடித்துக் கூவி, காலைப்பொழுதை வாவென்று அழைப்பதற்கோ நான் இந்த வருணச் சேவலை வளர்த்தேன்! எவ்வளவு கொடுமையிது? இந்தச் சேவலை, தாவென்றவர்க்குத் தரும் என் தலைவனின் பெரிய மலையில் கொண்டு போய்வைத்து, கூவின அதன் வாயைக் கிழித்து விடுவேன்; ஆசையால் இதை இவ்வளவு அருமையாக வளர்த்தோமே என்றுதான் அப்போது பொறுத்துக்கொண்டிருந்தேன்"

எப்படியிருக்கிறது தலைவியின் பேச்சு பார்த்தீர்களா? எத்தனை விதமான உணர்ச்சிகள் அவள் பேச்சில்! இதோ பாடல்:

"போவென் றிரவைச்
சிறகால் அடித்துப்
பொழுதை யிங்கே
வாவென் றழைப்பதற்
கோவளர்த் தேன்வர்ணச்
சேவ லைநான்
தாவென் றவர்க்குத்
தருமென் தலைவன்
தடஞ் சிலம்பில்
ஆவென்ற வாய்கிழிப்
பேன்பொறுத் தேன்வளர்த்
தாசை கொண்டே!"

—தனிப்பாடல்.

தான் தன் தலைவனுடன் கூடித் துய்த்த இன்பத்திற்கு இத்தகைய இடையூறு ஏற்பட்டு அதனுல் ஆத்திரமுற்று-அடங்காச் சினமுற்றுப் பேசுகின்ற ஒரு தலைவியை நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது சங்க இலக்கியப் பாடல் ஒன்று.

பொருள் தேடும் பொருட்டுப் பிரிந்து சென்ற தலைவன், தன் தலைவியிடம் வாக்குறுதி கொடுத்தபடி திரும்பி வரவில்லை. விரைவில் திரும்பிவிடுவதாகக் கூறிப்போன தலைவரை இன்னுங் காணவில்லையே என்று அவள் ஏக்கமுற்று, கதவைத் திறந்து வெளியே வந்து வழியைப் பார்ப்பதும், தலைவனைக் காணுத காரணத்தால் வீட்டிற்குள்சென்று கதவை அடைத்துக் கொள்வதுமாக இருந்த அவள் நிலை மிக மிகப் பரிதாபகரமானதுதான். அவனுந்தானென்ன, அவளைக் கண்டு, காதலின்பத்தில் மூழ்கித் திளைத்திருக்க நினைக்காமலா இருந்தான்? என்ன செய்ய முடியும்? எதிர்பாராத விதத்தில் அங்கேயே மேலும் சில நாள் தங்கியிருக்கும்படி நேர்ந்துவிட்டது.

தலைவன் திரும்பி வருகிருன். ஆம் தலைவியைக் காணும் ஆவலோடு விரைந்து வருகிருன். தலைவியிடம் நாம் வாக்குறுதி கொடுத்தபடி திரும்ப முடியவில்லையே! இப்போது போனுல் அவள் என்னென்ன பேசுவாளோ? அல்லது பேசாமலேயே பிணங்கிக்கொள்ளுவாளோ என்றெல்லாம் பலவாருக அவன் குழப்பமுற்ருன். காதல் உள்ளமல்லவா? தலைவன் ஊருக்குள் வந்தான்; வீட்டை நெருங்க நெருங்க அவன் உள்ளம் மேலும் மேலும் படபடத்தது.

பெரிதும் ஏமாற்றமுற்ற தலைவியோ, "இப்படி என்னை ஏமாற்றி, பிரிவுத் துயரால் என்னைப் பித்துக்கொள்ளச் செய்துவிட்டு அவர் அங்கே சுகமாக இருக்கிருர். வந்ததும் அவரோடு பேசவே கூடாது" என்று தீர்மானித்துக்கொண்டுதான் இருந்தாள். தலைவன் வந்தான், 'கண்ணே! எதிர்பாராமல் தாமதிக்க நேரிட்டது' என்று கூறிக் கொண்டே. பேசவே கூடாது என்று தீர்மானித்துவைத்திருந்த தலைவியோ அப்படியே எழுந்து, அவனைப் போய்த் தழுவிக் கொண்டாள். ஆம், அவனைக்

சாமி. பழனியப்பன்

— 9-ம் பக்கம் —

ஊடற் காட்சி

காதலனும் காதலியும் இதயம் திறந்து பேசிக் கொண்டிருக்கின்றனர். அவளுக்கு அவள் அத்தானின் 'குன்றத் தோள்கள், அகன்ற மார்பு, வீரம் சொரியும் விழிகள், அரும்பு மீசைக்குக் கீழேயிருக்கும் புன்னகையின் பிறப்பிடங்களான அதரங்கள், சுருள் சுருளான கேசம்' இவையெல்லாம் தெரிகிறது. அதைவிட அவனுடைய அன்பும் இன்பமும் பயக்கும் பேச்சும் செயல்களும், அவள் இதயத்தில் இனிய சுகந்த மயக்கத்தைப் பாய்ச்சுகிறது.

அப்படியே அவனுக்கும் 'அவளுடைய மெய்யில் ஊர்ந்து செல்லும் அழகுணர்வுகளின் நளினம், அன்பும் இன்பமும் தோயும் அவளின் அசைவுகள், ஆசை வார்த்தைகள், இதையெல்லாம் விட அவளுடைய குயிற் குரல் இசைக்கும் இனிமை கீதம்...! இவைகளுக்கு இணையாக இவ்வுலகத்தில் வேறெதுவும் கிடையாது அவனுக்கு. அந்தக் காதலன் காதலியின் இனிய அழகில் மெய் சோர்ந்து இருந்தான்.

"அத்தான்!" மணியோசையைப் போன்று 'டண்' என்று அவளின் குரல் ஒலித்தது.

அவன் தன் ஊமைக் கனவிலிருந்து விடுபட்டான். காதலியின் குரல் கேட்டு அவளை நோக்கினான். அவன் விழிகளில் ஆர்வம் தளும்பிக் கொண்டிருந்தது.

'அத்தான்! தாங்கள் இனி என்னை ஏமாற்றக் கூடாது...! தெரிகிறதா?" அவள் தன் காதலனைத்தான் இப்படிக் கேட்டாள்.

"இது என்ன கேள்வி? உன்னை எப்பொழுதேனும் ஏமாற்றியிருக்கிறேனா?" என்றான் அவன்.

"நீங்கள் என்னை எப்பொழுதும் ஏமாற்றியது கிடையாதா? உங்களுக்கு வந்த தும்மலை ஏன் நான் அறிய முடியாதபடி அடக்கப் பார்த்தீர்கள்?" அவள் தன் வாதத்தை விரிவுபடுத்தினாள்.

"நான் தும்மினால், யாரை எண்ணித் தும்மினீர் என்று கேட்டு விக்கி, விக்கி அழுகிறாய்! வருகிற தும்மலையடக்கி உன் ஊடலுக்குத் தடைபோட முயன்றேன். நான் தும்மலை வெளிவராமல் தடுத்தது, உனக்கு சந்தேகம் பிறக்க ஏதுவாகிவிட்டது. 'எவளோ என்னை எண்ணியதால்தான் எனக்குத் தும்மல் வந்தது; அதை நீ அறியாதபடி மறைக்கவே தும்மலை அடக்கினேன்' என்று ஊடுகிறாய். வரும் தும்மலை வராதே என்று சொல்லிச் சிரிப்பதா? அதைக் கண்டு நீ கொள்ளும் ஊடலை உடைப்பதா? நான் என்னதான் செய்வேன்...?"—அவன் தனது நிலையைத் தெளிவுபட விளக்கினான்.

"நீங்கள் சொல்வதெல்லாம் உண்மையென்றால்...நான் எதற்காக ஊடல்கொள்கிறேன்?"

அவள் சமாதானத்தை விரும்புபவளைப்போலப் பேசினாள்.

"போனதெல்லாம் போகட்டும். நீ என் பேச்சை உண்மையென்று நம்பிக் கொள்ளலாம் அன்பே! எனக்கு ஒரு உதவி வேண்டும்!" அவன் நயமாகப் பேசினான்.

"அத்தான்! நீங்களா என்னிடம் வேண்டுகோள் விடுப்பது? கட்டளையிடுங்கள் அத்தான் - காத்திருக்கிறேன்!" அவள் அவன் சொற்களுக்கு அடிமையைப் போன்று பேசினாள்.

"உன் இனிய குரலில் ஒரே ஒரு கீதம்...! ஆமாம், நீ கான மழை பொழிய வேண்டும்! செய்வாயா?" அவன் தன் இதய ஆசையை வார்த்தைகளால் வெளிப்படுத்தினான்.

"இதோ...! பாடுகிறேன் அத்தான்!" அவள் தனது இனிமைக் குரலில் இப்படிச் சொல்லி, இசை மழை பொழியலானாள். அதே கானம் அவனை மயங்கச் செய்தது. அவள் மெய் மறந்து பாடிக்கொண்டிருந்தாள். அழகுச் சிலையை ஊடுருவும் சிற்பியைப் போன்று அவளையே ரசித்துக் கொண்டிருந்தான் அவன். அழகிய தன் காதலியை இமை கொட்டாமல் பார்க்கலானான். இசையின் இனிமையில் உறைந்து போனான்.

அறுந்த காற்றாடியைப்போன்று அவன் இதயம் தடுமாறியது. பாடிக் கொண்டிருந்த அவள் இசையை நிறுத்திவிட்டாள். இசை நிறுத்தத்தால் தான் அவன் மனம் குழம்பினான். அவளுடைய முகத்தில் விகாரத்தின் விசுவரூபம் நிழலிட்டது. அவளுடைய நிலை அவனை அலைக்கழித்தது. அவன் முகத்தில் பல விதபாவங்கள் ஊர்ந்தன. அவன் நிலைமையைக் கண்டு அவள் மேலும் நிலை மாறினாள். தெளிவற்ற அவள் அகத்தின் தன்மை முகத்தில் அழுத்தமாகத் தெரிந்தது.

"அத்தான்! நீங்கள் என் பாட்டைக் கேட்டா மயக்கம் கொண்டிருந்தீர்கள்? என் அழகிலா லயித்திருந்தீர்கள்? இல்லை. அத்தான் இல்லை! என்னைப் பார்த்து வேறு யாரையோ—இன்னொருவளை ஒப்புமை கொண்டிருந்தீர்கள். அந்த நினைவில் தான் நிலையிழந்து என் பாட்டை ரசிப்பதாக, என் அழகை ரசிப்பதாக நடித்தீர்கள் ... என்னை ஏமாற்றமாட்டேன் என்கிறீர்களே—"! அந்த அழகுப் பெண் தான் இப்படித் தன் காதலனைக் கேட்டாள்.

அவனுக்கு அவள் பேச்சு பெரிய புதிரை ஏற்படுத்திவிட்டது. "நான் என்னதான் செய்வது? தும்மினால் அழுகிறாய், தும்மலை அடக்கினால் ஊடி என்னை நோகிறாய்; அமைதியாக உன் அழகை அள்ளிப் பருகினாலோ - வேறு யாரையோ நினைந்து உன் எழிலை நிலைப்படுத்துவதாக நினைந்து வெறுமனே ஊடுகிறாய்...! என் நிலையை நான் யாரிடம்தான் சொல்லி ஆறுதல்கொள்வேன்...!" அவன் குரலில் ஊடலின் வாதனை ஊர்ந்தது.

அவனுடைய பேச்சில் சுழன்ற 'உருக்கம்' - அவனுடைய உண்மையான மனப்பாங்கை உருவகித்தது. அவன் பேச்சின் உண்மையும் உருக்கமும் அவளைத் தன் நிலை கொள்ளச் செய்தது. ஊடல் தீர்ந்த அவள் உள்ளமும் முகமும் இன்ப உணர்வுகளால் நிரம்பின. அவளின் மகிழ்ச்சி - அவனையும் இன்பம் கொள்ளச் செய்தது.

இந்த ஊடற் காட்சியை உள்ளடக்கியுள்ள பாடல் - வள்ளுவரின் குறள்தான்! அருமையான பாடல்- பெருமையான ஊடற் பண்பை வெளிப்படுத்துகிறது. இதோ அந்தக் குறள்!

நினைந்திருந்து நோக்கினும்
- காயும் அனைத்துநீர்
யாருள்ளி நோக்கினீர் என்று.
—(குறள்)

★

இனியமணத்தை வாரி, சொரிந்து கிடக்கும் மலர் வனம். அழகின் இளமையை விதவிதமாகக் காட்சியாக்கிக் கொண்டிருக்கும் புது மண மலர்கள். கோதையர் தோகைமயிலெனப் பூக்கொய்திருந்தனர். காதலிகளைத் தொடர்ந்து காதலர்கள் சுற்றினர். வண்ண மலர்களின் செந்தேனை உண்ண வண்டினங்கள் ரீங்காரம் செய்து பறந்தன. பூந்தோட்டம் எங்கும் பூரிப்பும் புது நகையும் வாசம் செய்தது.

பருவம் பூரிக்கும் பூவை ஒருத்தி பூக்கொய்து கொண்டிருந்தாள். அப்பாவையை அருகி அண்டி வந்தான் அழகன் ஒருவன். பூப்பறிக்கும் பூவையின் நளினத்தில் தன் நெஞ்சைப் பறி கொடுத்திருந்தான் அவன். அவளை நிழல்போல் சுற்றிச் சுற்றி வந்தான்.

'சல சல' வென்ற சப்தம் அவன் செவியை ஈர்த்தது. அணில் தென்னம்பாளைகளில் தாவிக்கொண்டிருந்தது. அவன் கண்கள் தென்னையைக்கூர்ந்து கவனித்தன. தென்னம்பாளைகள், தென்னம் பூக்கள், பிஞ்சுகள், இளநீர்க் காய்கள்- அவன் மனதில் பதிந்தன.

"இளநீர்கள்! இளநீர்க் காய்கள்...!" அவன் வாய் முணுமுணுத்தது. அவன் உணர்ச்சிகளில் மதமதப்புத் தகித்தது. முகத்தில் ஒரு விதமோகச் சிரிப்பு திரிந்தது. "ஆ! என்ன ஆச்சர்யம்! இந்த இளநீர்க் காய்கள் - இள மங்கையரின் கொங்கைகளைப் போலுள்ளனவே! என்னே! என்னே?" என்று வாய் விட்டுப் பேசினான். தன்னையும் மறந்த நிலையில்தான் 'அக்காதலன்' பேசினான்.

அழகு அவனை எதிர்த்து நின்றது. ஆமாம், அவன் பேச்சைக் கேட்ட அவன் காதலிதான் அவனை எதிர் நோக்கி நின்றாள். அவள் கண்களில் கோபம் கொப்பளித்தது. உள்ளம் துடித்தது? உதடுகள் துடித்தன! இமைகள் துடித்தன! அவனோ இளநீர்க் காய்களையே பார்த்தபடியிருந்தான். அவன் உணர்வுகள் மோக வெறியில் எங்கெங்கு சென்று இன்பம் துய்த்தனவோ? ஆனால், அவளுக்கோ ஆத்திரம் பீறிட்டது.

"உங்களைத்தான் கேட்கிறேன்..! எதை அப்படிப் பார்த்துக்கொண்டிருந்தீர்கள்?" என்றாள் அவள் கடுமையாக.

"இதையா கேட்கிறாய்? இளநீர்க் காய்களை பார்த்துக் கொண்டிருந்தேன். இதில் என்ன வியப்பு?" என்றான்.

"எனக்கொன்றும் வியப்பில்லை. நீங்கள்தான் இவைகளைக் கண்டு வியந்து வாய் பிதற்றினீர்கள்! ஒன்றும் தெரியாதவரைப் போன்று விழிக்கிறீரே...!" என்றாள் கேலிக் குரலில்.

"நீ யென்ன பெரிய புதிர் போடுகிறாய்!" என்றான்.

"புதிர்போடவில்லை—நீங்கள் புலம்பியதைத்தான் சொல்கிறேன்!" என்றாள்.

"நான் புலம்பினேனா? புலம்புவதற்கு என் உறவில் யாரும் பிணமாகவில்லையே!" என்றான் கேலிச் சிரிப்போடு.

"மகா சமர்த்தாகப் பேசக் கற்றுக்கொண்டிருக்கிறீரே! இளநீர்களைக் கண்டு—இவை எவள் கொங்கைகளோ என்று புலம்பினீரே! உமது காமப் புலம்பலா எனக்குத் தெரியாது? எவள் கொங்கைகளை எண்ணி இப்படிப் புலம்பினீர்? என்னிடம் சொல்லலாகாதோ?" என்று உளம் கொதித்து முகம் வியர்த்துக் கேட்டாள்.

"அய்யோ! இதென்ன சோதனை? உன்னையன்றி வேறு எவளையும் எண்ணியறியாதே இந்த நெஞ்சம்! என் மீதா சந்தேகங் கொள்கிறாய்?' என்று கெஞ்சாமல் கெஞ்சினான்.

"முழுப்பொய்யர் நீர்! எம்மங்கை மீதோ மோகங் கொண்டதன் காரணமாகத்தான் - இளநீர்க் காய்களை அவளது தனங்களுக்கு உவமையாக்கி உவகையில் ஆழ்ந்து கிடக்கிறீர்!" என்று சொல்லிவிட்டு அவனது பதிலை எதிர்பாராமலே, சரசரவென்று நடந்தாள்.

மிதிலை இளைஞர்களும் மங்கையரும் செயல்புரியும் விதமே தனிதான். கனவிலும் நினைவிலும் விரக வேதனையும், காமக் குரோத சேஷ்டைகளும் தான் போலும். இவையெல்லாம் என் சொந்தக் கற்பனை அல்ல. கம்பரின் கைவண்ணம்!

குறளின் ஊடற் காட்சியைக் கண்டீர்கள்! கம்பரினின் ஊடல் காட்சியையும் கண்டீர்கள்! இனி உங்கள் தீர்ப்பு - எதை எடுப்பது, விடுப்பது என்பது! கம்பரின் ஊடற் புலம்பல் இதோ..!

"செம்மாந்த தெங்கின்
னிளநீரையொர் செம்மலேக்கி
அம்மாவிவை மங்கையர்
கொங்கையினைய வென்ன
எம்மாதர் கொங்கைக்-
கிவையொப்பன வென்றேரேழை
விம்மா வெய்தும்பா
வெயராமுகம் வெய்துயிர்த்தாள்."

—"எழில்"

> "போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 2 | 24-4-56 | இதழ் 45

யாருக்காக?

"கலை வளர வேண்டும், கலைஞர்களை வெளி நாடுகளுக்கு அனுப்ப வேண்டும்" என்று இந்திய சர்க்கார் பேசுவதும், சுய விளம்பரம் செய்து கொள்வதும், பிற நாடுகளில் தங்களைக் கலை நேசர்கள் என்று காட்டிக் கொள்வதற்காகத்தான் என்பது படிப்படியாக வெளியாகி வருகிறது. நாட்டியக் கலையை வளர்ப்போம் என்கிறார்கள்; நாடகக் கலைக்குப் புத்துயிர் அளிப்போம் என்று துடிக்கிறார்கள் — ஆனால் அவர்களே வேறொரு பாதையில் கலைப் பதுமையை உடைத்துவிடப் பெரு நடைபோட்டுத் திரிகிறார்கள்.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன், இந்தியத் துணைக் கண்டத்தின் துணைத் தலைவர் ராதாகிருஷ்ணன் அவர்கள் நாடகத்தின் மறுமலர்ச்சிபற்றி பேசியிருந்தார், இலக்கிய கர்த்தாவின் போக்கை அடக்குவதும், ஒடுக்குவதும் அறிவுக்கு ஒவ்வாத செயல் என்று அவர் கண்டித்திருந்தார். சட்டத்தால் மாற்ற முடியாத சமுதாயத்தைப் புரட்சி இலக்கியங்களால் மாற்றிவிட முடியும் என்றும் அவர் உறுதி கூறியிருந்தார். ஆனால் சிரசிருக்க வாலாடுவதுபோல, இரண்டு தினங்களுக்கு முன் செய்தியொன்று வெளியாகி யிருக்கிறது. சினிமாப் படத் தணிக்கையாளர்களுக்கு, மேலும் அதிகாரம் கொடுக்கப் போவதாகச் சொல்லப்படுகிறது. அவர்களுக்கு படத்தின் கதையையும் கட்டுப்படுத்த அதிகாரம் அளிக்கப்படுமாம். ஏதோ இப்போது தணிக்கையாளர்கள் கத்திரிக்கோலே பிடிக்காதது போல இனி மேல்தான் அவர் கண்டிப்பாக இருக்கப் போகிறார்கள் என்றும் பயம் காட்டுகிறார்கள். கேவலம், தமிழ் நாட்டில் எடுக்கப்படும் படம் ஒன்றுகூடச் சரியாக வெளியாவதில்லை; [illegible]ாமல் நடக்க வேண்டும்; அசைவற்றுப்பேச வேண்டும் என்றுகூறும் 'நியாய'ப் புத்திசாலிகளுக்கு மேலும் அதிகாரம் என்றால், எதிர்கால கலையுலகைப் பற்றிக் கேட்க வேண்டியதே இல்லை.

காரியக் கமிட்டியில் உறுப்பினர்கள் வற்புறுத்தினார்களாம். அதற்குக் கலைப் பிரிவு மந்திரி நடவடிக்கை மேற்கொள்வோம் என்றாராம். யார் அந்த உறுப்பினர்கள்? வரண்ட உள்ளம் கொண்ட— எதிர்த்து எழுதத் திராணியற்ற அந்த உறுப்பினர்கள் யாராக இருக்கும்? மக்கள் மத்தியிலே மண்டிக் கிடக்கும் உளுத்துப்போன கொள்கைகளைத் தூக்கி எறியப்பாடுபடும்...தென்னாட்டுக் கலையுலகின் வைரியர்களாக நடமாடிக் கொண்டிருக்கும் அவர்கள் தமிழ் உறுப்பினர்களை தவிர வேறு யாராகஇருக்க முடியும்? அந்த 'மூடிச்சுபோடி'கள் தமிழிசையைக் கெடுத்தார்கள்; அறிவுசார்ந்த நல்ல நிகழ்ச்சிகளை ரேடியோவில் நீக்கினார்கள். வீடுகளின் முன் கட்டில் இருந்த ரேடியோ பெட்டியை அர்மாமிகள் அடுப்பங்கரையில் வைத்துக் கொள்ள வேண்டிய கேடுகெட்ட நிலைக்குக் கொண்டு வந்தார்கள். இப்போது சினிமாவைச் சாடுகிறார்கள். எந்த நாட்டிலும், இரட்டை உள்ளம் கொண்ட அரசு எதிலும் வெற்றி பெற்றதாகச் சரித்திரத்தில் இல்லை. இங்கே காங்கிரஸ் சர்க்கார் வெற்றி பெறக் கனவு காண்கிறது. அனந்த சயனம் அய்யங்காருக்காக இந்து மதச் சட்டத்தை எதிர்க்காமலிருப்பதும், வெளி நாட்டுப் புகழுக்காக ஜோசியத்தைமட்டும் கண்டிப்பதுமாக இருக்கும் நேரு சர்க்கார், இப்போது யாருக்காகவோ சினிமாவை அழித்திட முனைந்திருக்கிறது. புராணப் படங்களும், ஊமைப் படங்களும்தான் இனி எடுக்கப்பட வேண்டும் என்று உத்தரவிடுவார்கள் போலிருக்கிறது. புத்திசாலிகள்! முன்னேற்றம் விரும்பிகள்!

சர்க்கார் கலையுலகைக் கட்டுப்படுத்த விரும்பினால், அந்தக் கலையே அவர்களின் தர்பாருக்குக் கூற்றுவனாக மாறிவிட்டாலும் ஆச்சரியமில்லைதான்.

நிதியமைச்சருக்குப் புதுப் பட்டங்கள்!

தட்சிணப் பிரதேச அமைப்பைத் தமிழ் உள்ளம் கொண்டவர்கள் அத்தனை பேரும் எதிர்த்து வருகிறார்கள். சென்னைக்குத் தமிழ்நாடு என்று பெயரிட வேண்டுமென்று எல்லோரும் விரும்புகிறார்கள். எழுத்தாள சங்கத்திலே கூட இத் தீர்மானம் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. பண்பாட்டில் நாட்டம் கொண்டவர்கள், தமிழ் இனத்தின் மேன்மைக்குப் பாடுபடுபவர்கள் அத்தனை பேரும் ஆதரிக்கிறார்கள். ஆனால் நமது மாநிலத்து நிதியமைச்சர் 'தன் சொந்த அபிப்பிராயம்' என்ற பேரிலே கவைக்குதவாததை எல்லாம் சொல்லி வருகிறார். தமிழ் நாடு என்ற பெயர் அவருக்கு வேண்டாமாம். சென்னை ராஜ்யம் என்ற பெயர்தான் வேண்டுமாம். நிதியமைச்சரின் இந்தப் பஞ்சாங்க யோசனையை நாம் பல முறை இடித்துரைத்துவிட்டோம். ஆயினும் அவர் அதை ஏற்றுக்கொள்ளாமல் தமது 'திருத்தொண்டினை'ச் செய்து வருகிறார்.

சென்ற 10-4-56 இதழில் தோழர் கைலாசம் என்பவர் "ஆசிரியத் தோழருக்கு" என்ற பகுதியில் நிதியமைச்சருக்கு 'சோர்ந்தாரைக்கொல்லி' என்று பட்டம் கட்டியிருந்தார். மற்ற நண்பர்களையும் நிதியமைச்சருக்குப் பட்டப் பெயர்கள் கொடுக்க வேண்டுமெனறும் கேட்டிருந்தார். அதன்படி பல நண்பர்கள் சுப்பிரமணியத்துக்குப் பட்டங்கள் தந்துள்ளனர். அவற்றை இங்கே வெளியிட்டுள்ளோம். ஒவ்வொரு பட்டமும் நமது நிதி அமைச்சருக்கு உரியதுதான். சந்தேகமில்லை. இதைப் பார்த்தாவது அவரது பித்தம் கொண்ட மூளை சற்றுச் சிந்தித்துத் திருந்தட்டும்.

பட்டங்கள்	கொடுத்தவர் பெயர்.
அரசியல் பபூன்	இரா. கேசவன், சென்னை
குல்லா கூலி	பெ. தாமு, உறையூர்
வீடண தாசன்	ஆர். எஸ். பிரகாசம், பரமக்குடி.
கோடரிக் காம்பன்	
தொண்டர் அடிப்பொடி ஆழ்வார்	பி. மு. இளங்கோவன், கோட்டாம்பட்டி.
குள்ளநரிக் குடிலன்	ஆ. சன்னு, பனையூர்
தென்னாட்டு கோட்சே,	
திராவிட சகுனி,	
வடநாட்டுக் கங்காணி,	மாமன்னன், திருச்சி.
தமிழக பேடி	
கோவை பன்னாடை	
புல்லுருவி	ரங்கன், சென்னை 2
பேசும் பிணம்	சுப. செல்வன், திரிகோணமலை
இனத்துரோகி	ம. த. இராசாராம் சென்னை 12
தாயைக் கொன்றவன்,	
சகுனி	கோ. சங்கரன், மதுரை
மடமையின் சின்னம்	
மதராஸ் மந்தி,	இளங்கோவன், சென்னை
மந்தமதி மந்திரி,	
உடன் பிறந்து கொல்லும் வியாதி	இரா. இளந்தென்றல்
அரசியல் கில்லாடி	எஸ். வீ. சக்கரை, தாராபுரம்
தாயகத் துரோகி,	த. கி. ஜெபபால், தஞ்சை
அவாளின் அடிவருடி	மூர்த்தி, சிதம்பரம்
தமிழகத்தின் அவமானச் சின்னம்	
முடத் தெங்கு	எழிலரசு, சென்னை 6
மக்கட் பதடி	[illegible], காஞ்சி
விபீஷணன் II	[illegible]ராசன், அழகிய பாண்டியபுரம்
பதவிப் பித்தன்	கருணாகரன், செம்பொன்னார் கோயில்
நச்சரவு	
பச்சோந்தியார்	உசைன், சேலம்
ராஜாஜியின் பம்பரம்	ப. திவாகர், தாரமங்கலம்
ஆஞ்சனேயர்,	
தமிழ் இனத்துரோகி	அழகு ஈட்டி, தாம்பரம்
அடிவருடி	
ஆச்சாரியாரின் அடிவருடி	தாரகை, கோடிக்கால்பாளையம்
தமிழ்த் துரோகி	சா. சதாசிவம், உப்புப்பாளையம்
ஆச்சார்ய சீடர்	கா. விசுவநாதன், வேடிச்சிபாளையம்
தலையாட்டும் பெருமாள் மாடு	
மக்கள் துரோகி	அ. இராசகோபால் பெரியகுளம்
இந்திய சர்க்காரின் அனவுன்சர்	
குலத்துரோகி	அ. மு. இராவணன், போளூர்
ராஜாஜியின் குரல்	இ. தம்பிராசா, திரிகோணமலை.
வடநாட்டு எடுபிடி	கி. அ. ஆனந்தன் கிரம்பூர்.
சதி மந்திரி	அறிவழகன், திருச்சி,
உருத்திராட்சப் பூனை	எஸ். நெடுஞ்சேரலாதன், கடபோக்காத்தி.

வடவன்தன் கோலெடுத்தால் வட்டடித்து ஆடும்
இடையில்'உம்' என்றால் உறுமும்—கடிக்கும் பல்
காட்டி விழிக்கும், மணியனென்னும் வாலுண்டே!
சுப்பன் 'குரங்கனெனச்' சொல்.

—வாணம்பாடி, முசிறி.

சிலம்பு வழங்கும் செல்வம்

இராசன்—

பன்மொழிப் புலவர்
கா. அப்பாதுரை,
எம். ஏ., எல். டி

சிலப்பதிகாரம் சங்க காலத்து ஏடா, பிற்காலத்திய ஏடா?

மேலீடாகக் காண்போருக்கு இது கால ஆராய்ச்சிக்கு மட்டுமே உரிய கேள்வி என்று தோற்றக்கூடும்.

இக்கேள்வி கால ஆராய்ச்சிக்கு மட்டுமே உரியதானால், சிலம்பின் இலக்கியச் சுவை நுகர விரும்புவோர் இக்கேள்வியையும் அதற்குரிய விடையையும் ஒதுக்கிவைத்து விடலாம் என்று கூறுவதில் தவறில்லை. திரு. ஆர். கே. சண்முகத்தின் நிலை இதுவே. 'பழத்தின் பிறப்பு வளர்ப்புப் பற்றி ஆராய்வோர் ஆராயட்டும். நாம் தின்று களிப்போம்!' என்று அவர்போல நாமும் இன்முடிவு காணலாம். ஆனால் இலக்கிய நயத்தில் மட்டுமே அக்கறை கொண்ட அவர், தாமே ஆசிரியர் கால இடப்பண்புகளை அறிவதில் அவ்வளவு ஆர்வம் காட்டியுள்ளார்.

"எங்களுக்கு அழியாத சிலம்புச் செல்வத்தைக் கொடுத்த அடிகளே! நீர்யார், நீர்யார்?' என்று நாம் கேட்டுக்கொண்டேயிருக்கிறோம்! அவரோ, பதில் சொல்லாமல் புன்னகையுடன் 'குணவாயில் கோட்டத்தில்,' எல்லையில்லாத அமைதியுடன் வீற்றிருக்கிறார்!" என்று அடிகள் பற்றி நாம் எதுவும் அறியமுடியாதிருப்பது குறித்து தாம் அடைந்துள்ள ஆற்றாமையை அவர் எவ்வளவோ இலக்கிய நயம்படச் சித்தரித்துள்ளார் என்பது காணலாம்.

இலக்கிய நயமும் கவிதை நயமும் தான் காணவேண்டும், கால ஆராய்ச்சி அவ்வளவு தேவைப்படுவதல்ல என்று மட்டுமே திரு. ஆர். கே. எஸ். கொண்டார். ஆனால் இராவ்பகதூர் வையாபுரி இன்னும் ஒருபடி மேற்சென்றுள்ளார். இலக்கிய நயமும் கவிநயமும் உணரக் கால ஆராய்ச்சி ஒரு தடையாய் இருக்கிறது என்று அவர் கருதியுள்ளார். தெய்விகக் கவிநயங்களைக் காண வொட்டாமல் வழி மறைத்து மலைபோல் கிடக்கும் ஒரு மாடாகக் கருதிக் கால ஆராய்ச்சியை அவர் காய்கிறார். ஆயினும் தம் கோட்பாட்டுக்கு மாறாக அவர், தாமே தம் சிலப்பதிகார ஆராய்ச்சியின் ஒரு பெரும்பகுதியைக் கால ஆராய்ச்சிக்குத் தரத் தயங்கவில்லை.

கால ஆராய்ச்சி என்று இராவ் பகதூர் காய்வது கால ஆராய்ச்சியின் ஒருபுடைச் சார்பை மட்டுமே என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. சிலம்பின் இலக்கிய நயத்தையும், கவிதை நயத்தையும் காணத் தடையாயிருக்கும் ஆராய்ச்சிச் 'சனியன்' சிலப்பதிகாரம் பிற்காலத்தது என்று வாதாடும் ஆராய்ச்சியன்று; அது சங்க காலத்தது, அது தனித் தமிழ்க் காலத்தது என்று வாதாடும் ஆராய்ச்சியே என்று அவர் கருதியிருத்தல் வேண்டும்.

ஆராய்ச்சி பற்றிய ஆராய்ச்சி

சிலப்பதிகார கால ஆராய்ச்சி வெறும் கால ஆராய்ச்சியல்ல என்பதை ராவ்பகதூர் நன்கு அறிந்திருந்தார் என்றே கூறலாம். ஏனெனில் அது சங்க காலத்தது அன்று என்பதை ஏற்றுக்கொண்டால், அது வரலாற்று ஏடல்ல என்று வாதிடத் தேவையேயில்லை; அது மட்டுமல்ல. அதன் வரலாற்றுச் செய்திகள் யாவும் கற்பனையைவிட மோசமான போலி வரலாற்றுக் கட்டுமானம் ஆகிவிடுதல் கண்கூடு. ஏனெனில் சிலப்பதிகார வரலாற்றுச் செய்திகள், வரலாற்றுச் செய்திகளல்லவானால் அவை, திறமை வாய்ந்த கற்பனைகள் மட்டுமல்ல? வரலாற்றுக்கு மாறான பொய் வரலாறு ஆகிவிடும். வேண்டுமென்றே வரலாற்றை மறைப்பதற்காகப் புனைந்துருவாக்கப்பெற்ற வஞ்சகத்திரை ஆகிவிடும். மேலும் அது ஆரியப் பண்பாட்டைக் குறிக்கொண்ட கம்ப இராமாயணத்துக்கு எதிராகத் தமிழ்ப் பண்பாட்டைக் குறிக்கொண்ட ஏடாக அமையாது. கம்ப இராமாயணத்தைப் போலவே கற்பனைப் புளுகை மொழிபெயர்த்த போலிக் கற்பனைப் புளுகாகிவிடும்.

இராவ் பகதூரின் சிந்தனைத் திறன் அவர் எதிரிகள் பலராலும் எளிதில் அறியப்படாதது. ஏனெனில் அவர் ஆராய்ச்சிகளையோ புலமையையோ ஏற்காத, திரும்பிப் பாராத தமிழ்ப்புலவர் உலகிலே கூட அது பல பிளவுகளையும் குழப்பங்களையும் உண்டுபண்ண முடிந்திருக்கிறது. சங்க இலக்கிய ஆர்வப் புலவரிடையே தத்தம் உள்ளார்ந்த ஆர்வங்களுக்கேற்ப அது பல ஆராயா நம்பிக்கைகளைவளர்க்கவும் உதவியுள்ளது. சிலப்பதிகாரம் சங்க காலத்திற்குப் பிற்பட்ட நூலாயிருக்கக்கூடும் என்று சிலரும், அது சங்க காலத்திய ஏடாயிருந்தாலும் கூட, சங்க காலத்திறுதிக்குரியதாக வேனும் இருக்கவேண்டும் என்று சிலரும் கொள்கின்றனர். இக்கருத்துக்கள் ஆராய்ச்சிகளல்ல, ஆராய்ச்சிகளைத் தூண்டுபவைகளுமல்ல! ஆராயா முடிவுகளாகவே நின்று, மேல் ஆராய்ச்சிகளைத் தடை செய்பவையே ஆகும். மற்றொருபுறம் ஆரிய எதிர்ப்பாளர், திராவிட இயக்கத்தவரிடையே, தாம் விரும்பாத ஆரியக் கருத்துக்களையும், ஆரியம் என்று தாம் நினைக்கும் கருத்துக்களையும் பிற்காலத்திய ஆரியத் தொடர்புக்குரியன என்று ஒதுக்குவதற்கு அது தூண்டுதல் தருவதாயிற்று.

இத்தகைய பல திசை ஆர்வ முடிவுகளின் குளறுபடிகளுக்கிடையே, சிலப்பதிகாரம் பழந் தமிழகப் பண்பாடுகளின் ஒரு பலகணி என்பதும், அது சங்க இலக்கியம், திருக்குறள், தொல்காப்பியம் பெருங் கதை ஆகியவற்றுடன் ஒப்பாக மறைந்த உலக நாகரிக மரபுகளை உயிர்ப்பித்துக் காண உதவும் ஓர் அருங்கருவி என்பதும் மறக்கப்பட்டுவிட்டன, மறக்கப்பட்டு வருகின்றன. அதன் 'முத்தமிழ், மரபு புலவர்களின் மாயச் சொல்லணி மரபுகளில் ஒரு மரபாகிவிட்டது. சிலம்பு உண்மையிலேயே மாண்ட தமிழர் இசையின் ஓர் உயிர்ச்சுவடு என்பதையும், அது உலகளாவிய வளர்ச்சியுடையதாய், சமஸ்கிருத நாடகம், கிரேக்க ஆங்கில நாடகங்கள், சீன ஜப்பானிய நாடகங்கள் ஆகிய உலக நாடக மரபுகளின் கருமூலமாய் இயங்குவது என்பதையும் இன்று ஆராய்ச்சியாளர் கூடக் காணத் தவறியுள்ளனர். இவை பற்றி எண்ணவே அவர்கள் தயங்குகின்றனர்.

சங்ககால மிது ?

ஆராய்ச்சி பற்றிய ஆராய்ச்சியை இத்துடன் நிறுத்தி, சிலப்பதிகார காலம் பற்றிய வாதங்களைக் காண்போம்.

சிலப்பதிகாரம் சங்ககாலத்ததல்ல என்று இன்று கருதுபவர் பலர் இருக்கலாம். ஆனால் அங்ஙனம் கூறுபவர், வாதிடுபவர் மிக மிகச் சிலரே. அவர்களுள் தலைசிறந்தவர், குறிப்பிடத் தகுந்த மூல ஆராய்ச்சியாளர் இராவ்பகதூர் வையாபுரி அவர்களே. அவர் ஏடுகளையும் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் தொடர்ந்து வாசிப்பவர்கள் அவர் எழுத்தும் உரையும் செல்லும் திசை வேறு, அவர் மூளையும் இதயமும் செல்லும் திசைகள் வேறு என்பதை எளிதில் காண்பர். அவர் உரைகளும் இதற்கேற்ப முன்னுக்குப்பின் முரண்படுவன. பல சமயம் அவை வளைய வளைய வருபவை. நெய்க்குத் தொன்னை ஆதாரம், தொன்னைக்கு நெய் ஆதாரம் என்று கூறும் ஆதாரமற்ற வாதங்களாய் அவை இயங்குகின்றன.

இன்று சிலப்பதிகாரம் சங்க காலத்தது அன்று என்று கூறும் இவரும் இவர் சகபாடிகளும் முன்பு சங்ககால வரையறையையே மறுத்தவராவர் என்பதைப் பலரும் மறந்திருக்கக்கூடும். கம்பஇராமாயணம், தேவாரம் ஆகியவற்றின் காலமும் ஒன்று என்று வாதிட முயன்றவர்கள் தாம் இவர்கள். இராவ் பகதூரின் மிக அணிமைக்கால ஆராய்ச்சிகளிலும், சைவசித்தாந்த சமாஜத்தார் வெளியிட்ட சங்க இலக்கியத் தொகுப்பின் முன்னுரையிலும் இக்கருத்தின் நிழற் கூறுகளையும், வீழ்ந்துபட்ட இக் கருத்தை வேறு வடிவில் புதுப்பிக்கும் முயற்சிகளையும் காணலாம்.

உழக்கில் கிழக்கு மேற்கு

சமாஜப் பதிப்புக்காரர் திருக்குறள் உட்பட்ட பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்சங்ககாலத்துக்குப் பிற்பட்டவையாயிருக்கக்கூடும் என்ற ஐயம் தெரிவித்து, அவற்றைத் தம் சங்க இலக்கியத் தொகுதியில் சேர்க்காததற்கு இதையும் ஒரு காரணமாகக் குறிக்கின்றனர். அந்நாளைய ஆராய்ச்சியாளர் பலர் கருத்து இது என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஐயத்துக்கிடமில்லாத சங்கத் தொகை நூல்களென்று சமாஜப் பதிப்பாளர் ஏற்றுக்கொண்டவை பத்துப் பாட்டும் எட்டுத் தொகையுமேயாகும். ஆனால் இவற்றிலும் இராவ்பகதூர் முற்காலத்தன, பிற்காலத்தன பகுத்தாய்ந்து காண்கிறார்.

உழக்கையே ஒழித்துவிட முடியாத நிலையில், உழக்கில் கிழக்கு மேற்காவது காண விரும்பும் முயற்சிகளே இவைகள்.

பிற்காலத்தவை என்று சங்கப் பாடல்களில் சிலவற்றை அவர் குறிக்கக் காரணம் என்ன?

திருமுருகாற்றுப்படை போன்ற பத்துப்பாட்டிலடங்கிய பாடல்கள் சமயச் சார்பானவை: ஆகவே அவை பிற்பட்டவையாயிருக்க வேண்டும் என்று அவர் வாதிடுகிறார்.

ஆனால் இக்கருத்துக்கள் பிற்பட்டவை என்று அவர் கருதுவதற்கு ஆதாரம் என்னவெனில், அவை 'பிற்பட்ட' பாடல்களில் காணப்படுகின்றன என்று அவர் பதில் கூறுகிறார்.

இராவ்பகதூரின் வாதம் இங்கே நச்சுச்சுழல் வாதமாகிறது. ஏனெனில் முதல்வாத முடிவு இரண்டாம் வாத ஆதாரமாகிறது. அதே சமயம் இரண்டாம் வாத முடிவே முதல் வாதத்துக்கு ஆதாரமாகக் காட்டப்படுகிறது. இவ்வாறு ஆதார முடிவுகள் சுற்றி சுற்றிச் வருகின்றன. ஆயினும் வாதம் இங்கே பிழைபட்டதானாலும் அது திறமையற்ற வாதம் என்று கூறுவதற்கில்லை. ஏனெனில் அது ஆரியப்பண்பு ஆர்வலர்களுக்கும் மனநிறைவு அளிக்கிறது. ஆரியப்பண்பை வெறுப்பவர்களுக்கும் மனநிறைவு அளிக்கிறது. ஆராய்ச்சி எவ்வளவு தவறானதாயினும் பிரச்சாரம் திறமை வாய்ந்ததாகியுள்ளது.

இங்கே தம் குழியில் தாமேவிழுபவர்கள் திராவிடப் பற்று அல்லது தனித்தமிழ்ப் பற்றுக்கொண்டவர்களே. அவர்கள் முதலில் விரும்பாததை எல்லாம் ஆரியம் என்று தூற்றி, பின் ஆரியம் என்பதற்காகவே வெறுத்தொதுக்கி அவற்றை ஆரியருக்கே உரிமையாக்கிவிடுகின்றனர். இதன்மூலம் அவர்கள் மறைமுகமான, ஆனால் முதல்தரமான ஆரியப்பிரசாரம் செய்துவிடுகின்றனர். அவர்கள் சான்று எதிரியின் சான்றுதலால், அது பிழைபட்ட வாதமானாலும் வலிமை வாய்ந்த தருக்கம் ஆகிவிடுகிறது!

இரு சாரார் முடிவுகளும் தவறு என்பதைத் திறந்த உள்ளமுடையவர் காண்பது எளிது. ஏனெனில் இங்கே இரு திசைகளிலும் வாத முறையே தவறு. எப்படியெனில், சமயச்சார்பு காணப்படுவதனால் திருமுருகாற்றுப்படை சிறிது பிற்பட்டது என்று கொள்ளலாமானால், பிற்காலப் புராணங்களில் கூட மிகவும் பிற்பட்ட கந்தபுராணம், பாகவதர் புராணம் ஆகியவற்றின் கருத்துக்கள் பரிபாடலில் காணப்படுவதனால் அவை மிக மிகப் பிற்பட்டவை, கம்பராமாயண காலத்தவை என்று கூறவேண்டி வரும்.

பிற்பட்ட புராணக் கருத்துக்களுக்கு தமிழ்ச்சங்க மரபுரைகளும் மக்கள் வாய் மரபுகளுமே மூல முதலாகும் என்பதைப் பல வரலாற்று ஆராய்ச்சியாளர் சுட்டிக் காட்டியுள்ளனர். திருத்தந்தை ஹீராஸ் புராணங்களுக்கும் இதிகாசங்களுக்கும் உரிய மூல மரபுகள் ஆரியருக்கு முற்பட்ட தமிழினம் சார்ந்தவை என்று விளக்கியுள்ளார்.

15-4-56 அன்று அலமேலு அப்பாதுரை இல்லத்தில் தி. மு. கழக 39வது வட்ட துணைச் செயலாளர் தோழர் சி. கி. மூர்த்தி அவர்களுக்கும் தோழியர் து. வள்ளியம்மைக்கும் அறிஞர் அண்ணா தலைமையில் திருமணம் நடந்த அதே நாளில், தி. மு. கழக 40வது வட்ட பொருளாளர் கோ. தாமோதரன் அவர்களின் ஆண் மகவுக்கு அறிஞர் அண்ணா அவர்களால் வீரமணி எனப் பெயரிடப்பட்டது. அதன் நினைவாகத் தென்றலுக்கு ஒரு ரூபாய் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

மூவர் கற்பில் மூத்த கற்பு?

— ஒரு மறுப்பு —

சென்ற 'தென்றல்' இதழில் ஆசிரியர் அவர்கள் எழுதிய கட்டுரை சுவையுடைத்தாக விருந்த தெனினும், கருத்து வேறுபாட்டிற் கிடமளித்தது. மூவர் கற்பில் மாதவியின் கற்பையே மூத்த கற்பாக ஆசிரியர் அவர்கள் காட்டியது குறித்து ஏற்படும் ஐயப்பாடுகளையும், யான் கொண்ட மாறுபட்ட முடிவுக்கான காரணங்களையும் ஈண்டுக் காட்ட முற்படுகின்றேன்.

கோப்பெருந்தேவி, கண்ணகி, மாதவி ஆகிய மூவரும் கற்புடைப் பெண்டிர் என்பதில் எள்ளளவேனும் ஐயமேற்பட இடமேயில்லை. ஆயினும், மாதவிக்கெனத் தனிநலங் காட்ட விழைந்த ஆசிரியரின் மேற்கோள்களும் கருத்துக்களும் மாறுபடத் தக்கன. கண்ணகி குறித்தும் கோப்பெருந்தேவி குறித்தும் எழுதும்போது சிலப்பதிகார வரிகளையே எடுத்தாண்ட ஆசிரியர், இறுதியில் மாதவி பற்றிக் குறிப்பிடும்போது.

'ஆடிய சாயல் ஆயிழை
மடந்தை' என்பது முதலாக
'நயம்பா டில்லை நாணுடைத்து...'
என்பது வரையும்
'காதல னுற்ற கடுந்துயர்
கேட்டு' என்பது முதல்
'திருந்தாச் செய்கை தீத்தொழிற்
படாஅள்' என்பது வரையுமாக

மணிமேகலை அடிகளை எடுத்தாண்டது வியப்பே!

சிலம்பினுட்காட்சிதரும் மும்மணிகளுள் முதிர்ந்த மணியைக் காணப் போந்த ஆசிரியர், சிலம்பைப் புறத்தே யொதுக்கித் தள்ளி, மேகலையின் முத்தெடுத்து ஆதாரம் காட்ட முற்படுவது அத்துணை ஏற்புடைத்தாமோ?

நம் கவனத்திலுள்ள மூவரது கற்பினியல்பு குறித்தும், இம்மூவருக்கும் பொதுவான ஒரு நிகழ்ச்சி கொண்டே உணரமுடியும். அதுதான் முறையுங்கூட. கதைப் போக்கில் மூவரும் கணவனை யிழக்கிறார்கள். அவ்விழப்பை மூவரும் எவ்வெவ்வாறு ஏற்றுக்கொள்கிறார்கள், அவ்வாறு ஏற்கும் முறைகளிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகள் யாவை எனக் கண்டால், முடிவு காண்டல் எளிதாகும்.

முதலாவதாக, மாதவி, ஆசிரியர் கருத்துப்படி மூவரில் மூத்தாள், எவ்வாறு கோவலனின் மரணச் சேதியை ஏற்கிறாளென்று காண்போம். நேரிடையாக இளங்கோ வடிகளின் கூற்றாக மேற்கண்ட நிகழ்ச்சி சிலப்பதிகாரத்திற் கூறப்படவே இல்லை. ஆயினும், கங்கை யாற்றின் தென்கரையில் வீற்றிருந்த சேரன் செங்குட்டுவனைத் தமிழ் நாட்டிலிருந்து சென்று கண்ட மாடலன் என்னும் மறையோன், கண்ணகியின் பெற்றோரும், கோவலனின் பெற்றோரும், மாதவியும் எவ்வெவ்வாறு கோவலன் - கண்ணகியின் அவல முடிவை ஏற்றனர் என்பது குறித்துக் கூறும் கூற்றில் மேற்கண்ட சேதியை அறியலாம்.

அது காலை,

மற்றது கேட்டு
மாதவி மடந்தை
நற்றாய் தனக்கு
நற்றிறம் படர்கேன்
மணிமே கலையை
வான்துயர் உறுக்குங்
கணிகையர் கோலங்
காணா தொழிகெனக்
கோதைத் தாமம்
குழலொடு களைந்து
போதித் தானம்
புரிந்தறங் கொள்ளவும்''

என்று மாடலன் உரைக்கிறான். அதாவது: "அச்செய்தியினை மாதவி கேள்வியுற்று, 'யான் நன்மையாகிய பகுதியிற் செல்லக் கடவேன்; நீ மணிமேகலையை மிக்க துன்பத்தினைச் செய்யும் கணிகையர் கோலத்தினளாகச் செய்யாதொழிக' என்று தன் தாயிடத்துச் சொல்லி, கோதையாகிய மாலையினைக் கூந்தலுடனே களைந்து, புண்ணியதானம் செய்து துறவறம் கொண்டாள்."

'கோவலன் மாண்டான்' எனக் கேட்டவுடன் பதைத்தாளில்லை; கொதித்தாளில்லை; மிக அமைதியாகத் தன் மகளை நல்ல வழியிற் செலுத்துமாறு தன் தாயை வேண்டிக்கொண்டு கூந்தலையும் மாலையையும் களைந்து துறவுக்கோலம் பூண்டாள். மேற்கண்ட செயல்கள், ஏதோ கடமைக்காக, வேண்டுமென்று செய்துகொண்டனவாகக் காட்சியளிக்கின்றனவே யல்லாது, கோவலன் மாண்டான் என்ற துயர்ப் பெருக்கில் மூழ்கி ஆற்றப்பட்டவையாகத் தோற்றவில்லை.

எனினும், கோவலனின் மறைவு, மாதவியை வேறு ஆடவன்பாற் செலுத்திற்றென்று நிலைநாட்டவன்று யான் துணிவது, கோவலனின் மரணச்சேதி, மாதவியை மரத்துப்போகச் செய்தது. 'இவ்வுலக வாழ்வே மாயம்' என்ற கேடுகெட்ட வேதாந்தத்திற்கு இழுத்துச் சென்றது. 'ஒரு கலைஞன் மாண்டான்; ஒரு கலைச்சுவைவாணன் மரணமுற்றான்' என்ற எண்ணத்தை மட்டுமே மாதவியின்பால் ஏற்படுத்திற்று அச்சேதி.

அடுத்து, காவியத்தலைவி கண்ணகி, காவியத்தலைவன் கோவலன் கொலைக்களப் பட்டதைக் கேட்டு எந்நிலைக்காளானாள் எனக் காண்போம். இளங்கோவடிகள், தம் கூற்றாகவே கீழ்க்காணும் வரிகளை அமைத்துள்ளார்.

"எனக் கேட்டு,
பொங்கி எழுந்தாள்
விழுந்தாள் பொழிகதிர்த்
திங்கள் முகிலோடுஞ்
சேண்நிலங் கொண்டெனச்
செங்கண் சிவப்ப
அழுதாள்தன் கேள்வனை
எங்கணா என்னா
இனைந்தேங்கி மாழ்குவாள்,
இன்புறு தங்கணவர்
இடரெரி யகமூழ்கத்
துன்புறு வனநோற்றுத்
துயருறு மகளிரைப்போல்
அன்பனை இழந்தேன்யான்
அவலங்கொண் டழிவலோ;

என்று வருந்திக் கூறிப் பின், குரவைக் கூத்தாடும் பொருட்டுக் குழுமிய இடையர் குல மகளிரையும் கதிரவனையும் நோக்கி, 'கள்வனோ! என் கணவன் கள்வனோ?' எனக் கேட்டு நின்றாள் கண்ணகி.

மேற்கண்ட வரிகள், கோவலன் மரணமுற்றதால் கண்ணகிக் கேற்பட்ட அளவிடற்கரிய வருத்தத்தையும், அதனினும் மிக்குற, 'தன் கணவன் கள்வனெனப் பட்டுக் கொலையுண்டான்' என்ற சேதி துன்பம் நல்கியதென்பதையும் நன்கு காட்டுகின்றன. கண்ணகியின் துயரத்தின் காரணம், 'கணவன் மாண்டான்' என்பதைப் பார்க்கிலும், 'மன்னவன் தவறிழைப்ப அன்பனை இழந்தேன் யான்' என்பதிலே தான் என்னுங் கருத்தை மேற்கண்ட வரிகளின் அமைப்பு சுட்டுகின்றது. கண்ணகி, தன் கணவனின் குணவியல்புகளின்மீது கொண்டிருந்த அசையா வுறுதியை வெளிப்படுத்துகின்றது அவளது கூக்குரல்.

இனி, காவியத்தலைவியாகவோ, காவியத் துணைத்தலைவியாகவோ இல்லாத சிறு பாத்திரமான கோப்பெருந்தேவி, தன் கணவனான பாண்டியன் நெடுஞ்செழியனின் மரணத்தை எங்ஙனம் ஏற்கிறாள் என்பதைக் காண்போம். முற்கூறிய இருவரும் தம் தலைவனின் மரணத்தைக் கேள்விப்படுகின்றனர்; இவளோ, நேரடியாகக் காண்கின்றாள். இது குறிப்பிடத்தக்க வேறுபாடுதான். எனினும், இவள் அதை ஏற்கும் முறையே அலாதி.

"மன்னவன் மயங்கிவீழ்ந்
தனனே தென்னவன்
கோப்பெருந் தேவி
குலைந்தனள் நடுங்கிக்
'கணவனை இழந்தோர்க்குக்
காட்டுவ தில்'லென்று
இணையடி தொழுதுவீழ்ந்
தனளே மடமொழி"

என்ற நான்கே வரிகள் தாம் கோப்பெருந்தேவி, தன் கணவனிறந்ததைக் கண்ட நிலையை இளங்கோவடிகள் தம் குறிப்பாகக் கூறுவன.

கோப்பெருந்தேவி, தன் கணவன் மாண்டதைக் கண்ணுற்றாள். 'கணவனை இழந்தோம்' என்ற சேதியை உணர்ச்சி நரம்புகள் மூளைக்கு எடுத்துச் சென்றன. அவள் மூளையால் அத்துணைப் பேரிடியைத் தாங்க முடியவில்லை. உடனே, கணவனது பாதங்களைத் தொட்டு வணங்கினாள்; மறு விநாடி, அங்கே உயிரற்ற அவளது உடல் கிடந்தது.

இதே நிகழ்ச்சியை, மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் வாயிலாகச் சேரன் செங்குட்டுவனுக்குக் கூறும் முகமாக வெளிப்படுத்தும் இளங்கோ வடிகள்,

"மயங்கினன் கொல்லென
மலரடி வருடித்
தலைத்தாள் நெடுமொழி
தன்செவி கேளாள்
கலக்கங் கொள்ளாள்
கடுந்துயர் பொறாஅள்
மன்னவன் செல்வுழிச்
செல்க யானெனத்
தன்னுயிர் கொண்டவ
னுயிர்தே டினள்போல்
பெருங்கோப் பெண்டும்
ஒருங்குடன் மாய்ந்தனள்"

என்றுரைக்கிறார். 'மன்னவன் செல்வுழிச் செல்க யான்' என்பது கோப்பெருந்தேவியின் வாய்மொழியாக இருக்க நியாயமில்லை. ஏனெனில், நேரடியாகக் காட்சியை வருணிக்கிற இளங்கோவடிகள், 'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில்' என்பதைத் தேவியின் கூற்றாகக் கூற, பின்னாட்களுக்குப் பின் அதைச் சேரனுக்கு விவரிக்கும் சாத்தனாரின் 'மேற்கோளை' முற்றிலும் கொள்ளுதல் பொருத்தமற்றது. 'மன்னவன் செல்வுழிச் செல்க யான்' என்பதை அவள் தன் மனதிற்கு இட்டுக்கொண்ட கட்டளையாய்க் கொள்ளலாம்.

இவ்விடத்து, 'தன்னுயிர் கொண்டவனுயிர் தேடினள்போல் பெருங்கோப் பெண்டும் ஒருங்குடன் மாய்ந்தனள்' என்ற இறுதி வரிகள் கூர்ந்து நோக்கத் தக்கன.

மாதவி, 'கோவலன் மாண்டான்' என்ற சேதி கேட்டதும் மணிமேகலையை நினைக்கிறாள்; தன் துன்பத்தை எண்ணுகிறாள்; 'மணிமேகலையும் தன்னைப் போலவே துன்பமெய்த வேண்டுமா?' என்று தனக்குள் வினவிக் கொண்டு 'கூடாது' என விடையிறுக்கிறாள். அதுவே, அவளது முதற் கூற்றாக அமைகிறது.

கண்ணகியோ, 'நம் கணவன் கள்வனெனப்பட்டான், கள்வனெனப்பட்டான்' என்றே நினைக்கிறாள்; 'மன்னன் தவறினான், முறையின்றித் தண்டித்தான்' என்ற எண்ணமே மேலோங்குகிறது; அதுவே, அவளது முதற் கூற்றாக வெளிப்படுகிறது.

கோப்பெருந்தேவியோ கணவனை இழந்தோம்' 'கணவனை இழந்தோம்' என்றே எண்ணுகிறாள். தனக்கு வேறு வழியில்லை என உணர்கிறாள்; உடனே அவள் வாயிலிருந்து, 'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்' எனும் சொற்கள் வெளியாகின்றன.

மேற்கண்ட மூன்று நிலைகளில், எது மூத்த கற்புக்குரிய நிலையென்பது மிக எளிதில் அறியத்தக்க ஒன்றே. மாதவி, கோவலனின் கலைத்திறம் பாழாயிற்றே என்றும் மணிமேகலை தந்தையை இழந்தாளே என்றும் மட்டுமே கவலையுறுகிறாள்; கண்ணகி, கணவன் அநியாயமாகக்கொல்லப்பட்டானே, மன்னன் நீதி தவறிக் கோவலனைக் கள்வனெனக் கருதிவிட்டானே என்ற கவலைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறாள்; கோப்பெருந்தேவியோ, மற்றிருவரினும் ஒருபடி மேற்சென்று, 'நம் கணவனை இழந்தோம்' என்ற ஒரே எண்ணத்தில், கவலையில் மூழ்குகிறாள். மூத்தவள் மூன்றாமவள் தானே?

சுருங்கக் கூறின், மூவரும் முழு நிலவன்னாரே; ஆயினும், மாதவி, கிரகணத்திற்காட்பட்ட முழு நிலவு; கண்ணகி, கார் காலத்து மங்கிய முழுநிலவு; கோப்பெருந்தேவியோ, கோடை காலத்து நள்ளிரவின் ஒளி முற்றிய முழுநிலவு. மூவரிலும் மூத்து, தலைக்கற்பையே காத்து கணவனுடன் உயிர்நீத்து, உலகு உள்ளளவும் சாகா நிலைபெற்ற கற்புக்கரசி, கோப்பெருந்தேவிதான்.

—மு. இளமாறன்.

தி. மு. கழகக் கிளைச் செயலாளர்களுக்கு

மே 17, 18, 19, 20 தேதிகளில் திருச்சியில் நடைபெறும் மாநில மாநாட்டுக்குவரும் கிளைக் கழகங்கள் ஒவ்வொன்றும் தங்கள் கிளைக் கழகத்தின் பெயர் பொறித்த கொடிகள் தயார் செய்துகொண்டு வர வேண்டுகிறோம்.

ஒவ்வொரு மாவட்டக் கழகங்களும் ஒன்றரை அடி அகலம் 10 அடி நீள அளவில் மாவட்டத்தின் பெயர் பொறித்த பேனர் ஒன்று கொண்டுவர வேண்டுகிறேன்.

எம். எஸ். மணி.

பாண்டி நாட்டுக்கும் தமிழுக்கும் பரம்பரைத் தொடர்பு உண்டு. இரண்டுக்குமுள்ள தொடர்பை நன்குணர்த்துவதற்குத் 'தண்ணூர் தமிழளிக்குந் தண் பாண்டி நாட்டானை' என்ற சொற்றொடரே போதுமானது.

அத்தகைய் தமிழ்ப் பாண்டி நாட்டிலேயுள்ள இராமநாதபுர மாவட்டத்தில் முதுகுளத்தூர் என்றோர் ஊர் இன்றும் இருக்கிறது. பல நல்ல தமிழ்ப் புலவர்கள் வாழ்ந்த இடம் அது.'கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும்' என்பார்கள். அது என்னவோ நமக்குத் தெரியாது. ஆனால், முதுகுளத்தூரில் தமிழார்வமும், தமிழ்ப் புலமையும் கட்டவிழ்ந்து பரவிக் காணப்படுகிறது. ஒரு சமயம், அந்தஊரைச் சேர்ந்த நாவிதன் ஒருவன் பக்கத்து ஊருக்குப் போயிருந்தான். அவன் சில காலம் அங்கேயே தங்கித் தொழில் செய்ய வேண்டியதாகிவிட்டது. அவ்வாறு தொழில் செய்து கொண்டிருக்கும்போது, அவனிடம் ஒரு பெரியார் 'சவரம்' செய்து கொள்வதற்காக வந்திருக்கிறார். அந்த நாவிதனே, 'சவரம்' செய்து கொண்டே பேசத் தொடங்கியவன்,

'ஐயா! தாங்கள் எந்த ஊர்?' என்று கேட்டானும்.

'முதுகுளத்தூர்; இங்கு வந்து ரொம்ப காலமாகிவிட்டது' என்றாராம் வந்திருந்த பெரியவர்.

'ஓகோ! அப்படியா? நானும் அந்த ஊர்தான். ஒரு முக்கியமான வேலையாக வந்தேன். சில காலம் இங்கேயே தங்கியிருக்கும்படி ஆகிவிட்டது' என்று 'ஊர்ப்பாசத்'தோடு பேசத் தொடங்கிய நாவிதன்,

'ஐயா! தங்கள் பெயர்...?'' என்று சற்று பணிவுடன் கேட்டானும்.

'ஆறுமுகம்' என்றாராம் அவர்.

'ஆகா! இரண்டையும் சேர்த்தால் வெண்பாவின் ஈற்றடியாகி விட்டதே' என்றுசொல்லி மகிழ்ந்தானும் நாவிதன்.

ஆம். 'முதுகுளத்தூ ராறுமுகம்' என்பது வெண்பாவின் ஈற்றடிதானே!

இத்தகைய முதுகுளத்தூரில் பிறந்தவர்தான் 'சரவணப் பெருமாட் கவிராயர்' என்பவர். சிவ

"நச்சுக் கோப்பை"

திருக்கோட்டியூர் அண்ணா நாடக மன்றத்தார் நடிக்க இருந்த கலைஞர் மு. க. வின் 'நச்சுக் கோப்பை' நாடகம் 28-4-56ம் தேதிக்கு மாற்றி வைக்கப்பட்டிருக்கிறது. அன்றிரவு 10 மணிக்கு திருக்கோட்டியூர் சந்தைப்பேட்டைக் கூத்தரங்கில் நடைபெறும்.

சிலேடைப் புலவர்

சாமி பழனியப்பன்

ஞான யோகிகளின் மாணுக்கருள் ஒருவரான சோமசுந்தரம் (பிள்ளை) அவர்களின் மாணுக்கர் இவர். 'அட்டாவதானம் சரவணப் பெருமாட் கவிராயர்' என்று இவரை அழைப்பதுண்டு. இராமநாதபுரம் சேதுபதி மன்னரின் அரசவைப் புலவராக இருந்தவர். 'சேதுபதிவிறலிவிடுதூது' பாடியவர்; நன்கு நகைச்சுவை கொழிக்க அவர் பாடிய பாடல்கள் பல. செல்வர்கள் என நம்பிச் சிலரிடம் சென்றபோது, அவர்கள் நடந்துகொண்ட தன்மையைச் சித்திரிக்கும்படியாக அவர் பாடிய பாடல்கள் சிலவற்றைமட்டும் பார்ப்போம்:

ஒருநாள் கவிராயர் ஒரு செல்வனிடம் போனுர். அவனும், கவிராயரைப்பற்றி ஏதோ கொஞ்சம் தெரிந்தவன்தான். எனவே, கவிராயரைப் பார்த்ததும்,

'வெண்பா இயற்றும் பாவலரே! நீர் இப்படி என்னைத் தேடி வந்திருக்கிறீரே. என்ன, ஏதேனும் விசேடம் உண்டா?' என்று கேட்டான்.

உடனே கவிராயர், 'ஐயா! உங்கள்மீது உண்மையான ஒரு தமிழ்ப் பாடல் பாடிக்கொண்டு வந்திருக்கிறேம்' என்றார்.

அவ்வளவுதான், செல்வனின் முகம் வேறுபாடாகிவிட்டது.

'ரொம்ப அழகு, போங்க! ஏற்கெனவே ஒரு புலவர், அருமையான ஒரு 'கோவை'யையே என்மீது பாடிக் கொண்டு வந்தான். நானும் அந்தப் பாடல்களை விரும்பி, அவனுக்கு மூன்று படி பெரு வரகு கொடுத்தேன். அவ்வளவுதான். உடனே என் மனைவி, அதைப் பொறுக்கமாட்டாமல், மூன்றுமுறை தற்கொலை செய்து கொள்ளப் போனுள். அவள் உயிரைக் காப்பாற்றுவதற்கு நான் பட்டபாடு, அடேயப்பா இந்த ஊரே அறியுமே! அப்படியிருக்க, பாட்டுப் பாடுகிற புலவர் என்று சொல்லிக் கொண்டு என்னிடம் வந்திருக்கிறீரே வரலாமா? போய்விடும்! போய்விடும்!'

என்று கூறிப் புலவரை அனுப்பி விட்டான். இதனால் உளம் நொந்தபுலவர், 'ஐயகோ!என்னை ஏன் படைத்தாய்? இம்மாதிரி போ போவெனச் சொல்லி இழிவாகப் பேசுகின்ற கயவர்களோடு சண்டையிட்டுக் கொள்வதற்காகவா என்னை நீ படைத்தாய்?' என்று கேட்டுப் பாடுவதைப் பாருங்கள்.

'' வெண்பாச்சொல் கவிஞரே
  வந்ததேதும்மீது
    மெய்த்தமிழ் பாடி வந்தோம்;
'வெருநேர்த்தி முன்னமே
  நானூறு கோவையொரு
    வித்துவான் பாடி வந்தான்
நண்பாக மனம் வைத்து
  மூன்றுபடி பெருவரகு
    நான்கொடுத் தேன தற்கிந்
நாடெலாந் தெரியுமென்
  மனையாட்டி மூன்றுதரம்
    நான்றுகொண்டுயிர்பிழைத்த
புண்பாடெ லாமறிந்
  தின்னநீர் கவிசொல்லும்
    புலவரென் றிங்கு வந்தீர்
போம்போ மெனச்சொல்லிப்
  புலையாடு புலையரோடு
    போராட வோபடைத் தாய்?
....
....
..........................''

இவ்வாறு— உள்ளம் நொந்து பாடிய கவிராயர் வேறொரு செல்வனை நாடிப் போனுர். அவன் கவிராயரைக் கண்டதும்,

'ஐயா! வாருங்கள். தாங்கள் யார்?'' என்று கேட்டான்.

'நான் ஒரு புலவன்' என்றார் அவர்.

செல்வனே, 'ஐயகோ! அறிவுக்கு மோசமான செயலல்லவோ நடைபெறப் போகிறது' என்றெண்ணி, அஞ்சி, சொல் தடுமாறி-உளறி, உடம்பெலாம் நடுக்கமுற்று ஏதும் புரியாமல் நிற்கிறன்.

இறுதியில், ஒருவாறு தன்னைத் திடப்படுத்திக் கொண்டு,

'ஐயா! தாங்கள் என்னிடம் வந்த காரியம் என்ன?' என்று கேட்டான்.

கவிராயரோ, சட்டென்று வந்த காரியத்தைச் சொல்லிவிடவிரும்பவில்லை. ஆதலின்,

''புகழ் பரவிய காமதேனுவைப் போன்றவரே! கற்பகத்தருப் போன்ற பெருங் கொடை வள்ளலே! சிந்தாமணிக்கு நிகரான மதிப்பு வாய்ந்தோய்! எப்போதும், அரிச்சந்திரன் போன்று உண்மை தவருத உயர் குணச் செம்மலே!' என்று அவனைப் பார்த்துக் கூறி, மேலே பேசத் தொடங்குகிறர். அவ்வளவுதான். செல்வனின் கண்கள் கோவைப் பழம் போலச் சிவந்து விடுகின்றன. ஆம். அவனுக்கு மனத்திலெழுந்த சினத்தை அவனது முகம் காட்டியது. சினந்தெழுந்த அந்தச் செல்வன்,

''அட புலவோய்! யாரைப் பார்த்து நீ பேசுகிருய்? மாடு என்றுய்! கல் என்றுய்! மரம் என்றுய். இது மட்டுமா? 'அரிச்சந்திரன்' என்று வேறு அடாத சொல் சொல்லிவிட்டாய்! இது எனக்குப் பொருந்துமா? அரிச்சந்திரனைப்போல நான் யாருக்கு அடிமையானேன்? யாரிடத்தில் நான் என் மனைவியை விற்றேன்? ஐயகோ! தீராத பெரும் வசைச் சொல்லையன்றோ சொல்லிவிட்டாய்? இவ்வாறு நீ என்னை இகழ்ந்து பேசியதை நான் எப்படி மறக்க முடியும்?''

என்று சினந்து பேசிக் கவிராயரை விரட்டியடித்து விடுகிறன். மேலும் ஏமாற்றமடைந்த கவிராயரோ, 'ஐயகோ! இத்தகைய மிகக் கொடிய தீயரைப் பாடி நொந்தேனே!' என்று தன்னை நினைந்து இரங்கிப் பாடுகிறர். ஆம். இதோ பாடல்:

'' வாரும்நீர் யாரென்ன
  வித்துவா னென்னவும்
    மதிமோசம் வந்த தென்றே
வாய்குளறி மெய்யெலாம்
  மிகநடுக் குற்றுநீர்
    வந்தகா ரியம் ஏதெனச்
சீருலா வியகாம
  தேனுவே தாருவே
    சிந்தாம ணிக்குநிக ரே
செப்புவச னத்தரிச்
  சந்த்ரனே யென்னலுஞ்
    சினந்திரு கணுஞ்சி வந்தே
யாரைநீ மாடுகல்
  மரமென்று சொன்னதும
    லாலரிச் சந்த்ர னென்றே
யடாத சொற்சொன்னை
  யார்க்கடிமை யாகினேன்
    யார்கையில் பெண்டு விற்றேன்
தீருமோ விந்தவசை
  யென்றுரைசெய் வெகுகொடிய
    தீயரைப் பாடி நொந்தேன்,
....
..........................,
..........................''

ஆகா! நொந்த புலவரின் உள்ளக் குமுறல் எவ்வளவு அழகாகப் பாடலில் பரிமளிக்கிறது என்பதற்கு மீண்டும் ஒருமுறை பாடலைப் படித்துப் பாருங்கள்!

எங்கள் சிறந்த வெளியீடுகள்

சாமி பழனியப்பன்			
காதல் இன்பம்	1	8	0
பேரறிஞர் பெர்னுர்ட் ஷா	1	0	0
புகழ்க்கன்னி	1	8	0
குழந்தையின்பம்	1	4	0
வி. ஆர். எம். செட்டியார்			
கட்டுரைக் கரும்பு	2	0	0
இலக்கிய விருந்து	2	0	0
கவிஞன் குரல்	2	8	0
தாகூர்			
காதல் கண்கள்	2	8	0
காதற் பரிசு	2	8	0
கிதாஞ்சலி	2	0	0
கனிகொய்தல்	2	0	0
வளர்மதி	2	0	0

Star Publications,
No. 5, New Market Street,
KARAIKUDI (Ramnad Dist.)

25

சுந்தர காண்டம் 1

பேரிடிப் படலம்.

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்.
—குறள்.

புகைவண்டி நிலையத்திலிருந்து வீட்டுக்குத் திரும்பும்போதே சுந்தரம் அமைதி இழந்துவிட்டான். இரண்டு நாட்களாக புது மண மயக்கத்தில் தங்கை இந்திராவின் முகத்தை அவன் சரியாகப் பார்க்காமல் இருந்தான். வண்டியில் அவள் அமரும்போது அந்த முகத்தைக் கவனித்த சுந்தரத்துக்குப்பல சந்தேகங்கள் தோன்றின. சிக்கலிலே உழலும் மனிதனின் சிந்தனை தேங்கிய முகம், பார்க்கிறவர்களை, '' ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்'' என்று கேட்க வைக்கும். இந்திராவைப்பார்த்து இந்தக் கேள்வியைக் கேட்கக் கூடிய நிலையில், சுந்தரம் இல்லை அப்போது. அதனால் வீட்டுக்கு வந்தும்கூட அந்தக் கேள்வியிலிருந்து விடுபட முடியாதவனாக அவன் இருந்தான். அவன் இப்போது சோக உலகில் நடந்துவிட்டான். திருமண நாளிலிருந்து அவன் பெற்ற மகிழ்ச்சி இந்தச் சிந்தனையில் எங்கோ ஓடி ஒளிந்தது. தங்கையிடத்தில் அவன் கொண்டிருந்த வற்றாத பாசம், அவனைச் சங்கடத்தில் ஆழ்த்திற்று. மாடி அறையிலே இங்கும் அங்கும் நடந்துகொண்டிருந்தான். சாரதை அங்கே வந்தாள். ''என்ன சிந்தனை'' என்று கேட்டாள். ''ஒன்றுமில்லை'' என்றான் வழக்கம் போல். சாரதை அவன் முகத்தையே பார்த்துக்கொண்டு நின்றாள். அவள் முகம் ஒரு மாதிரியாக மாறிற்று. ''தன்மீதுதான் ஏதாவது கோபமோ'' என்று அவள் எண்ணத் தொடங்கினாள். கோபம் வருவதற்குக் காரணம் ஒன்றுமில்லை என்றாலும் குழைவு மிகுந்த பெண் மனம் அப்படிச் சிந்தித்தது.

சுந்தரம் அவளைச் சரியாகக் கவனிக்காமல் முன்னும் பின்னும் நடந்து கொண்டிருந்தான். ''ஏனுங்க...'' என்று இழுத்தாள் அவள். அவன் தலை தூக்கிப் பார்த்தான். ''என்மேல் ஏதாவது கோபமா'' என்று கேட்டாள். சுந்தரம் சிந்தனை கலைந்து, ''சிச்சீ, பைத்தியம்! ஏனப்படி நினைக்கிறாய்? உன்மேல் கோபப்பட என்ன இருக்கிறது?'' என்றபடி அவளருகில் வந்தான். சாரதை தலை குனிந்து நின்றாள். கரு கருவென்று வளர்ந்திருந்த அவளது கூந்தலிற் கைவைத்து, முகத்தைத் தூக்கி அந்த வட்டநிலாத் திட்டின் வடிவழகை இமை கொட்டாமற் பார்த்தான். ''சாரதை!'' என்றான், அடைக்கும் குரலில். ''ஏனுங்க'' என்றாள் அவள். படித்த பெண் பட்டிக் காட்டுப் பெண் மாதிரிப் பேசினால் கணவனுக்கு மகிழ்ச்சியாய்த்தானிருக்கும். சுந்தரம் அவள் உதடுகளைப் பதம் பார்த்தான். தூரத்தில் நின்று பேசும் உதடுகளுக்கு வார்த்தை தேவைப்படுகிறது. நெருங்கிவிட்டால் மொழி இல்லாத உலகம் எவ்வளவோ பேசிவிடுகிறது! அங்கே சுந்தரமும் சாரதையும் எவ்வளவோ பேசினார்கள். சாரதை அருகில் நின்ற மயக்கத்தில் சுந்தரம் தங்கையைப் பற்றிய கவலையைக் கொஞ்சம் மறந்திருந்தான்.

...... சுந்தரம் ......

இருவரும் கட்டிலிலே வந்தமர்ந்தார்கள். என்னென்னவோ பேச விரும்பியவர்கள் போல இருவரும் காணப்பட்டார்கள். அவர்கள் எதிரே ஒரு புத்தகம் விரித்துக் கிடந்தது. சாரதை சுந்தரத்தின் அணைப்பிலே இருந்தாள். அவன் மார்பிலே முகம் புதைத்திருந்தாள். ஆகவே அந்தப் புத்தகத்தை அவள் காண முடியவில்லை. அவன் கண்டான். அணைத்த நிலையிலிருந்து அவளை விலக்காமலேயே அந்தப் புத்தகத்தை அவன் கையிலெடுத்தான். அதிலே முதல் வரி இப்படி இருந்தது: மனைவி ஒரு வீணையல்ல; வாசித்து முடித்தபிறகு உங்கள் விருப்பப்படி அதைச் சுவரில் தொங்கவிட முடியாது – சுந்தரம் சிரித்தான். சுவரிலே யார் தொங்க விடப்போகிறார்கள், மார்பிலேயே தொங்கிக் கொண்டிருக்கட்டும் இந்த வர்ணக் கிளி. சற்று நேரம் விலக்கி வைப்ப தென்றாலும் தணலாக எரிகிறதே மேனி. பைத்தியக்காரன் இந்தப் பழமொழியைச் சொன்னவன்! எட்டு மணிக்குக் கட்டிலுக்கு வந்து தொட்டுப் பார்த்தால் தான் மனைவி; விட்டுப் பிரியும்போது அவள்வெறும் பொம்மை. சுவைத்துத் தள்ள ஒரு பொருள் என நினைப்பவர்களுக்கு இந்தப் பழமொழி சரியாக இருக்கலாம். ஆனால் மனைவிதான் சேலை கட்டிய பூலோகம் என்று கருதுபவனுக்கு இந்தப் பழமொழி கேலிக்குரியது. நண்பர்கள்வந்து அழைத்தால், தாய் தந்தையர் வந்து சாப்பிடக் கூப்பிட்டால், ''ஏன் வந்தார்கள் இவர்கள்? இரண்டு வினாடி பிரிய நேர்ந்து விட்டதே!'' என்று ஏங்குகிறவனுக்கு இந்தப் பழமொழி தேவை இல்லை. மார்பிலே சாய்ந்திருக்கும் மங்கையர் திலகத்தின் கதகதப்புத்தான் உடம்பிலே உயிரை வைத்திருக்கக் கூடிய சராசரிச் சூட்டைத் தருகிறது என்று எண்ணி ஆயுள் முழுதும் அப்படியே இருக்க வேண்டும் என்றுதான் நல்ல கணவன் எண்ணமிடுகிறான். புத்தம் புதிய மலர் மொத்தமும் தனக்கே உரிமையாகி, தன் கைகளுக்கிடையே கட்டுண்டு கிடக்கிறது என்பதை எண்ணும்போது நாடும் முடியும் இல்லாத மன்னனாகிறான் மனிதன். சுந்தரம் அப்படித்தான் இருந்தான். சாரதையின் வாளிப்பான மேனி அவன் கைகளில் 'நீயே சதம்' என்று விழுந்து கிடந்தது. 'ஆவேசம் வருகிற பக்தன் மீது ஆண்டவனே வருகிறான்' என்பார்கள் புராணிகர்கள். புதிய காதலர்களும் அந்த நிலைக்குப் போய் விடுகிறார்கள்.

சுந்தரம் சாரதையை விலக விடுபவனாக இல்லை. அவளும் விலக விரும்பியவளாக இல்லை. முதியவர்களும் குறுக்கே வரவில்லை. ''தனிமை கண்டதுண்டு; அதிலே, சாரமிருக்குதம்மா'' என்றான் பாரதி. காலையிலே எண்ணிப் பார்த்தால் வெட்கம் தரக்கூடிய காரியத்தைக் காதல் நேரத்தில் தங்கு தடையில்லாமல் செய்துவிடுகிறான் மனிதன். காலையிலே கணவன் கண்ணால் பார்த்தாலும் 'சும்மா இருங்கள்' என்று சொல்லுகிற மனைவி காதல் நிலையில் அவன் கைகளுக்குக் கூடக் கட்டுப்பாடு விதிப்பதில்லை. இரு வேறு உலகங்களில் எண்ணங்களுக்கிடமில்லாத உலகம் காதல் உலகம். 'எனக்கு நீயும் உனக்கு நானும்' என்று இணைந்துவிடுகிற இருவர் தங்கள் இளம் வயதில் சிந்தித்துக்கூடப் பெற முடியாத இன்பத்தை அப்போது கண்டு அனுபவிக்கிறார்கள். பாடும் கவிஞனின் ஏடும் எழுத்தும் பாவையர் மேனியை விட்டு விலகாமல் அங்கேயே சுற்றிக் கொண்டிருப்பதற்குக் காரணம் அதற்குமேல் ஒரு இன்பம் எதிலும் கிடைப்பதில்லை.

சுந்தரமும் சாரதையும் உலகையே மறந்திருந்தார்கள், காற்று

வராத இடத்தில் அவர்கள் இருந்ததால் சுந்தரத்தின் மேனி வியர்த்தது. மெதுவாக அவனது சட்டைப் பொத்தானைக் கழற்றி வாயால் ஊதினாள் சாரதை. ஈசலின் இறகிலே இருந்துவரும் காற்றுப்போல் அவள் இதழிலே இருந்து வந்த காற்று, சுந்தரத்தின் வியர்த்த மேனிக்கு ஆறுதல் தந்தது. மின்சார விசிறியைப் போட்டிருந்தாலும் அவனுக்கு அந்த ஆறுதல் கிடைக்காது. கொவ்வை இதழ்களுக்கிடையில் புறப்படும் அந்தக் காற்று குளிர்ந்த மேகத்தின் நீரோட்டத்தோடு வருகிறது. சாரதை அதோடு நிற்க

...... சாரதை ......

வில்லை. தன் முந்தானைத் தலைப்பால் அவனது மார்பையும் கழுத்தையும் துடைத்தாள். கலைந்து, பின்புறம் ஒதுங்கியிருந்த அவனது தலைமயிரை, நெற்றியிலே தள்ளிவிட்டுச் சற்று அழகு பார்த்தாள் சாரதை. 'அத்தான்' என்றாள். "என் பெயரைச் சொல்லு பார்க்கலாம்" என்று மெதுவாகக் கேட்டான் சுந்தரம். "ஐயய்யோ! சொல்லக்கூடாது" என்றாள் அவள். "அடே! சும்மா சொல்லு! நாம் தானே இருக்கிறோம்! வேறு யார் இருக்கிறார்கள்?" என்றான் அவன். "உஸ்! சும்மா இருங்கள்! அதெல்லாம் மரியாதை இல்லை" என்று செல்லக் கோபத்துடன் பேசினாள் அவள். "அட! சொல்லுன்னா"-அவனும் செல்லமாகப் பேச ஆரம்பித்தான். "நான் மாட்டேன்" என்றாள் சாரதை. "அப்படியானால் நான் இப்பொழுதே தற்கொலை செய்துகொள்வேன்" என்று பயமுறுத்தினான் அவன்.

"ஐயோ! அப்படி யெல்லாம் பேசாதீர்கள்!"

"பின்னே சொல்லு!"

"எப்படிச் சொல்றது?"

"சுந்தரம்னு சொல்லு."

"எனக்கு வெட்கமா இருக்கு?"

"ஏங்கிட்டே என்ன வெட்கம்!"

"............"

"உம்! சொல்லு."

"சுப்பிரமணியம்"

"இதுவா என் பேரு!"

"ஐயோ வேண்டாமுங்க!"

"பாத்தியா!"

"சரி, சொல்றேன்....சுந்தரம்..."

என்று சொல்லிவிட்டுச் சேலைத் தலைப்பால் முகத்தை மூடிக்கொண்டாள் சாரதை. தமிழ்நாட்டுப் பெண்களுக்கு மட்டும்தான் இந்தப் 'பெயர் சொல்லா நோய்'. சுந்தரம் அப்படியே அந்தச் சேலைத் தலைப்பைப் பறித்துவிட்டுத் தன்பெயரைச் சொன்ன அந்த இதழ்களை 'நறுக்' கென்று கடித்து வைத்தான். அவளை அப்படியே படுக்கையில் சாய்த்தான். "ஏ கழுதே! ஏன் பெயர் சொன்னாய்? நான் அம்மாவிடம் போய்ச் சொல்லட்டுமா" என்று பயமுறுத்தினான் அவன். "ஐயய்யோ சொல்லிடாதீங்க! தப்பு, தப்பு" என்று கன்னத்தில் போட்டுக் கொண்டாள் அந்தக் கட்டழகி.

சுந்தரம் அவளது இரண்டு கைகளிலும் தன் கைகளைக் கோர்த்துக் கொண்டு, "அப்போ, இந்த இடத்தைவிட்டு நீ நகரக்கூடாது. நகர்ந்தால் என் பெயரை நீ சொன்னதாக நான் அம்மாவிடம் சொல்லிவிடுவேன்" என்றான். "சரி, சொல்லுங்க!" என்றாள் அவள். 'அம்மா' என்று சத்தம் போட்டான் சுந்தரம். 'ஐயய்யோ' என்று அவன் வாயைப் பொத்தினாள் சாரதை. ஐந்து நிமிடத்திற்கெல்லாம் மங்கையர்க்கரசி விடுவிடு என்று அங்கே வந்து, "ஏண்டா கூப்பிட்டே" என்று கேட்டாள். சுந்தரமும் சாரதையும் படபடவென்று பிரிந்தார்கள். மங்கையர்க்கரசி நேரம் தெரியாமல் தான் வந்ததற்காக வருத்தப்பட்டுக் கொண்டு கீழே இறங்கிச் சென்று விட்டாள். அவள் சென்றதும் சாரதை, "ஐயய்யோ! அத்தை பார்த்துட்டாங்க! தப்பா நினைச்சுக்குவாங்க; நான் போறேன்" என்று சற்று நகர்ந்தாள். "போறியா! நான் என்ன ஆகுறது?" என்று கேட்டான் சுந்தரம்.

"சீக்கிரம் வந்து சாப்பிடுங்க! அப்புறம்......"

"முடியாது! எனக்குப் பசியில்லை."

"ஏன் பசியில்லை?"

"உன்னைப் பார்த்தேன், பசி தீர்ந்துவிட்டது."

"கவிஞர் ஆகிறீர்களா?"

"ஆமாம்! அதுவும் நீ வந்ததால் தான்."

"சரி, அப்புறம் பேசலாம். வாங்க சாப்பிட!"

"முடியாது" - என்று சொன்ன சுந்தரம் மீண்டும் அவள் கையைப் பற்றி இழுத்தான். அவள் அருகிலே வந்து சமரசம் பேசினாள். சுந்தரம் சிரித்துக்கொண்டே சாப்பிடுவதற்காக இறங்கிச்சென்றான். அப்போது அவள் முன்னால் சென்றாள். சுந்தரம் பயபக்தியோடு பின்னால் சென்றான்.

அன்றைய இரவு இருவருக்கும் ஆனந்த இரவாகக் கழிந்தது. நாட்கள் அப்படியே நகர்ந்தன.

பத்து நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் காலையில் சுந்தரம் கண் விழித்தபோது, அன்றைய பொழுது அவன் மனதை வாட்டி எடுக்கும் என்பதை அறியாமலிருந்தான். பன்னிரண்டு மணிக்கெல்லாம் அவன் கைக்குத் தபால் ஒன்று கிடைத்தது. பிரித்துப் பார்த்த அவன் தலையில் பேரிடி விழுவது போல் தோன்றிற்று. அந்தக் கடிதம் சென்னையிலிருந்து வந்தது.

தென்றல்

மாநில மாநாடு--சிறப்பு மலர்

பொங்கல் மலர்பற்றிக் குறைப்பட்ட நண்பர்களின் குறை களைய, சிறப்பான முயற்சி

—ஆர்ட் பேப்பர் அட்டை; மூவர்ண முகப்பு; உள்ளே மூவர்ண ஆர்ட் சித்திரம்; ஏராளமான பக்கங்கள்—

★ அறிஞர் அண்ணா அவர்களின் பொன்னோவியம்!

★ பொதுச் செயலாளரின் செய்தி!

★ துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் எழுதும் "இயக்க வரலாறு"

★ திராவிட முன்னேற்றக் கழக நிகழ்ச்சிக் குறிப்புகள்

★ ஏராளமான படங்கள்

★ 'கண்ணதாசன்' எழுதும் "கழக மா காவியம்". மற்றும் பல!

—"தென்றல் மலர் சிறப்புடையது" என்ற பெயரை நிலைநிறுத்த, சிறப்பாகத் தயாரிக்கப்படுகிறது!—

—ஏஜண்டுத் தோழர்கள் 5-5-56 க்குள், கழிவு நீக்கி, முன் பணம் அனுப்பிப் பதிவு செய்துகொள்க!—

—குறிப்பிடப்பட்ட அனைத்தும் வரும்—

விலை பன்னிரண்டு அணாதான்.

....

....

கொழுந்துவிடும் தீக்காட்டில், அலை பூப்பிக்
குமுறிவிழும் பெருங்கடலில், முதலை வாயில்
அழுந்தவரும் என்றாலும் இதழின் மூலை
அரும்பவிழும் அல்லாது நடுக்கப் பாடல்
எழுந்துவரல் கிடையாது! தமிழர் சாதி
ஏற்றமுறப் பாடுபடும் எங்கள் வாழ்வில்!
விழுந்திருக்கும் தாய்நாடே! கவலல் வேண்டா!
வீரமிகுந் தோளுண்டு வெற்றி யுண்டு!

....

....

—கழக மாகாவியம்.

★ ★ ★

தென்றல்

ஜூன் முதல் வார இதழில்

கண்ணதாசன் எழுதும்

'மனம்போல வாழ்வு'

— புதிய தொடர் கதை —

—அந்த இதழிலிருந்து, தென்றல் புது வடிவங் கொள்ளும்.

குறிப்பு:—மாநில மாநாட்டு மலர் குறித்து, தென்றல் மே 1, 8 தேதிய இதழ்கள் வரமாட்டா. 15-5-56 அன்று காலை நாடெங்கும் மலர் மணம் பரப்பும். மற்றைய இதழ்கள் வழக்கம்போல். 22-5-56 இதழ், மாநில மாநாட்டுப் படங்களோடு, பதினாறு பக்கங்களாக இரண்டணா விலைக்கே வரும்.

உலகம் பலவிதம்

'அரசியலில் தலையிடாதீர்' என்று கொஞ்ச நாட்களாக மாணவர்களைத்தான் காங்கிரஸ் காரர்கள் கேட்டுக் கொண்டு வந்தார்கள். மாணவர்களின் பால் காங்கிரஸ் - கட்சிக்கு நல்லெண்ணம் போலும் என்று சிலர் பெருமைப்பட்டார்கள். நாம் எப்போதுமே எதிரிகளின் புகழ்ப் பசிக்கு இரையானவர்களல்ல. எனவே, உண்மையை எடுத்துரைத்தோம்; கோவாப் போராட்டத்திற்கு மாணவர்களின் தயவைத் தேடியவர்களுக்கு எப்போது புதிய ஞானோதயம் பிறந்தது என்று கேட்டோம். பதிலில்லை. பதில் வராது என்று நமக்கும் தெரியும்.

இப்போது ஒருபுதியபோதனை செய்யப்படுகிறது. "எழுத்தாளர்கள் அரசியலில் கலந்துகொள்ளக் கூடாது. தமிழ் வளர்க்கும் அவர்கள் அரசியலில் ஏன் தலையிட வேண்டும்?"-என்று 'சென்னையன்' சுப்ரமணியம் புத்தி சொல்லக் கிளம்பியிருக்கிறார். தமிழுக்கும் அரசுக்கும் பரம்பரை விரோதம் என்ற கண்ணோட்டத்திலேயே தான் சென்னையன் சுப்ரமணியத்தின் நடத்தையும் நாக்கும் நிரூபித்து வருகின்றன. தமிழ் கற்றவர்கள் அரசியலுக்குத் தகுதியில்லை என்ற எண்ணத்தில் கூறுகிறாரா, அல்லது, தமிழ் கற்றவர்கள் அரசியலுக்குள் நுழைந்தால் தமிழ் ஆட்சி மொழியாகிவிடுமே என்ற 'பீதி'யா? மொத்தத்தில் அரசியலுக்குள் மற்றவர்கள் நுழையக் கூடாது என்று எண்ணுகிறார் என்பது புலனாகிறது. தன்னுடைய கட்சி இலுப்பைப் பூவாயிருப்பதால், அதைச் சர்க்கரை என்று மதித்திடச் செய்வதற்கு வேறு வழியில்லை. எதிர்க்கட்சிக்கு நல்லவர்கள் வரக்கூடாது என்ற உபதேசம்தான் இனி அவருக்கு ஜீவக் கொள்கை.

★

உயிரோடிருக்கும்போது உதைத்து அனுப்புவதும், செத்துப்போன பிறகு அவருக்குக் கோயில் கட்டி 'ஆஹா, அவர் தெய்வப் பிறவி' என்பதும் தமிழ் நாட்டுக்கே உள்ள தனிப்(?)பண்பு! அதோடு இன்னொரு சிறப்பைத் தமிழ் நாடு அண்மையில் பெற்றிருக்கிறது.

கவிமணி தேசிக விநாயகம் அவர்கள் ஒப்பற்ற தமிழ்க் கவிஞர். ஏழையரின் இதயத் துடிப்பை எழுத்து வடிவாக்கும் செந்தமிழ்ப் பாவலர். அவருடைய நூலுக்குப் பரிசு கொடுத்துத்தான் அவரைச் சிறப்பிக்க வேண்டுமென்பதல்ல. அவர் படைத்துவிட்டுப் போயிருக்கும் புகழ் முத்துக்கள் சாகா வரம் பெற்றவை. விளம்பரம் தேவையில்லை அவைகளுக்கு. ஆனால் சென்னை சர்க்காரின் ஆதரவிலுள்ள தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரின் செயல் கவிமணியை அவமானப்படுத்துவது போல இருக்கிறது. 1954-ல் வெளியான சிறந்த ஆறு நூல்களுக்குப் பரிசில் வழங்கி இருக்கிறார்கள். கவிதைத் துறையில் கவிமணியின் 'தேவியின் கீர்த்தனங்கள்' என்ற நூலுக்குப் பரிசில் வழங்கியிருக்கின்றனர். தமிழ்வளர்ச்சிக் கழகத்தார் இது தேவையற்றது. கவிமணிக்கு இவர்கள் விளம்பரம் கொடுக்கத் தேவையில்லை. உயிரோடு இருக்கிறவருடைய கவிதை நூலுக்குத்தான் பரிசு கொடுத்திருக்க வேண்டும். அதுதான் முறை. ஆனால் சர்க்கார் செத்துப்போன கவிஞருக்குப் பரிசு கொடுத்திருக்கிறார்கள். ஒருவேளை அடுத்த முறை திருவள்ளுவர், சீத்தலைச் சாத்தனார் போன்றார்க்குப் பரிசு கொடுத்தாலும் ஆச்சரியமில்லை. புத்திசாலிகள் சர்க்கார் அல்லவா சென்னை சர்க்கார்!

★

"ஜாதிகள் ஒழிய வேண்டும்; சமயங்கள் மடிய வேண்டும்; இதுதான் தேச பிதா காந்தியின் ஆசை" —என்று காங்கிரஸ்காரர்கள் வாய் கிழியப் பேசுகிறார்கள். போனவாரம் கூட பந்த் பேசியிருக்கிறார். எந்த பந்த்? தமிழரை மிக மிகக் கேவலமாக மதித்து மதம் பிடித்தாடும் வல்லபந்த் பேசியிருக்கிறார், அணிமையில், 'ஜாதி வித்தியாசம் ஒழிய வேண்டும்' என்பதாக. ஏதோ, மற்றக் கட்சிக்காரர்கள் உயர்வு தாழ்வு பார்ப்பதாகவும், அதைக் காங்கிரஸ் மந்திரி கண்டிப்பது போலவும் பந்த் மனதில் எண்ணிப் பேசியிருக்கிறார். காங்கிரஸ் கட்சி நீங்கலாக மற்ற எந்தக் கட்சிக்காரர்கள் சொன்னாலும் அதில் அர்த்தமுண்டு. கேவலம், இந்து மகா சபைக்காரர்கள் சொன்னாலும்கூட தவறில்லை. அந்த அளவுக்கு உயர்வு தாழ்வு காட்டி நாட்டைப் பாழாக்கி வருகிறவர்கள் காங்கிரஸ்காரர்கள்தான். அவர்களே முந்திக் கொள்கிறார்கள், ஜாதி வித்தியாசம் பார்க்காதீர்கள் என்று. யார்! 'எட்டிப் போ, என்ற நிலை கூடாது' என்ற சுவரொட்டியை ஒட்டக் கூடாது என்று கர்ஜித்த காங்கிரஸ் கட்சி! அதற்கு ஒதுக்கப்பட்ட மூன்று லட்ச ரூபாய் என்ன ஆயிற்று என்று கேட்காத காங்கிரஸ் கட்சி! ஜாதி வித்தியாசம் காட்டக் கூடாதாம், உபதேசிக்கிறார்கள் ஊரைக் கெடுத்தவர்கள்!

சேவல் கூவிற்று...

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

கண்டதும் அதெல்லாம் மறந்தே போயிற்று. வேறு நினைவே இல்லை. அவள் உள்ளம் பெண்ணுள்ளமாயிற்றே!

பின், ஒருவாறாக, இருவரும் ஏதேதோ பேசினார்கள்; தலைவி, உணவு தயாரிக்கப் போனாள்; தலைவன் வேறேதோ வேலை பார்க்கத் தொடங்கினான். இரவுப்பொழுது விரைந்து வந்து கொண்டிருந்தது.

சிறிது நேரத்தில்...

இருவருமே உணவருந்தினர். நிலாமுற்றத்தில் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தனர்.

"சரி நேரமாயிற்று. எனக்குத் தூக்கம் வருகிறது" என்றாள் தலைவி.

தலைவனும் குறிப்பறிந்தான். இருவரும் எழுந்து போனார்கள், கட்டிலறைநோக்கி, 'கொள்ளை! கொள்ளை! கொள்ளை'

ஆம். எத்தனை நாட்கள் இருவரும் பிரிந்திருந்தனர். இரவு மிக விரைவாகப் பறந்தது.

சேவல் கூவிற்று!

அது அவளுக்கு இடியொலி போன்றிருந்தது. சட்டென்று அவள் கண்கள் சிவந்தன. சேவல்மீது கொண்ட சினத்தால் சினத்தின் மிகுதியால் தலைவி பேசுகிறாள் பாருங்கள்:

"குவிந்த கொத்துக்களையுடைய செங்காந்தளின் ஒளி பொருந்திய - அழகிய பூவைப் போல செக்கச் சிவந்த கொண்டையையுடைய சேவலே! கூட்டத்தோடு பொருந்தி வாழும் ஏ சேவலே! எங்கும் நல்ல விளைவின் பயனை அனுபவித்து வாழுகிறவர்களையுடைய இவ்வூரைச் சேர்ந்த என் தலைவனோடு இன்பத்தைத் தரும் இனிய காதற்களிப்பில் நாங்கள் மயங்கிக் கிடந்தபோது, எம்மை எழுப்பி, எங்கள் இன்பத்தைக் கெடுத்துத் தொலைத்து விட்டாயே! வீட்டிலுள்ள எலிகளைப் பிடித்துத் தின்னுவதற்காக இங்கு வந்து தேடி அலைகின்ற காட்டுப் பூனையிடம் நீ சிக்கி, அப்பூனையின் குட்டிக்குச் சிலநாள் வைத்திருந்து உண்ணும் உணவாகி நீ மிக்க துன்பத்தை அடைவாயாக!

தனது இன்பத்திற்கு இடையூறுசெய்தசேவல் உயிர்வாதைப் பட்டுச் சாகவேண்டும் என்று அவள் பேசுவதென்றால், அவள் எவ்வளவு துன்பமுற்றிருக்க வேண்டும். அத்துன்பத்தால் ஏற்பட்ட சினத்தின் சிகரத்திலிருந்து தலைவி பேசுவதாகக் கூறும் பாடல்தான் எவ்வளவு அழகாக அமைந்திருக்கிறது பாருங்கள்.

> குவியிணர்த் தோன்றி
> யொண்பூ வன்ன
> தொகுசெந் நெற்றிக்
> கணங்கொள் சேவல்
> நள்ளிருள் யாமத்
> தில்லெலி பார்க்கும்
> பிள்ளை வெருகிற்
> கல்கிரை யாகிக்
> கடுநவைப் படீஇயரோ
> நீயே நெடுநீர்
> யாணரூரன் றன்னொடு
> வதிந்த
> ஏம வின்றுயி
> லெடுப்பி யோயே!
>
> —குறுந். 107

★ ★ ★

இராசி பலன்

நாளிதழ்கள் சில, இராசிபலன் பலன் பார்க்கும் பைத்தியக்காரத்தனத்தை மக்களிடையே நாள் தோறும் வளர்த்து, அதன் மூலம் தாமே பெரும்பலன் அடைந்து வருகின்றன. 'சோதிடர்கள் மிகவும் ஆபத்தானவர்கள்: அவர்களை நம்பித் தங்கள் பிரச்சனைகளுக்குப் பரிகாரம் காண அணுகுகிறவர்கள் அதைவிட ஆபத்தானவர்கள்' என்று நேரு போன்றவர்களே கூறுகின்றனர்.

அண்மையில் இரண்டு நாளிதழ்களின் சோதிடர்கள் குறிப்பிட்டுள்ள பலன்களைக் கீழே குறித்துள்ளோம்: சோதிடம் என்பது கணிதமே என்றால், நான்கும் இரண்டும் ஆறு என்று தான் வரவேண்டும். அவ்வாறில்லாமல் ஐந்து என்று கூறினால், கூறுபவருக்குக் கணக்குத் தெரியவில்லை என்று கொள்ளவேண்டும். அல்லது, கூறுவது கணக்கல்ல என்று தெளிந்துகொள்ள வேண்டும். அதுதானே சரியானது? இதோ பாருங்கள் :

18 - 4 - 56 பலன் "தந்தி ஜோஸ்யர்"	18 - 4 - 56 பலன் "தினமணி ஜோஸ்யர்"
மேஷம் - உறவினர்கள் உதவி	மேஷம் - பிரயாணங்கள்
ரிஷபம் - துணிச்சலான செயல்கள்	ரிஷபம் - மன நிம்மதி
மிதுனம் - எதிர்பாராத உதவி	மிதுனம் - எதிர்பாராத நன்மைகள்
கடகம் - தேக சுகத்தில் அபிவிருத்தி	கடகம் - வியாபார அபிவிருத்தி
சிம்மம் - காரியத்தில் ஏமாற்றம்	சிம்மம் - லாப தினம்
கன்யா-முன்னேற்றமான தகவல்கள்	கன்னி - பெரிய மனிதர்கள் சந்திப்பு
துலாம் - எதிர்ப்புக்களைச் சமாளித்தல்	துலாம் - சுபச் செய்திகள்
விருச்சிகம்-இருண்டசூழ்நிலைமறைதல்	விருச்சிகம் - தெய்வ வழிபாடு
தனுசு - பிரயாசை பயனில்லாமை	தனுசு - பண வரவுகள்
மகரம் - அனுகூலமான நாள்	மகரம் - செலவினங்கள்
கும்பம் - தீரச் செயல்கள்	கும்பம் - சந்தோஷச் செய்திகள்
மீனம் - சந்தோஷமான நாள்	மீனம் - காரியானுகூலம்

★ ★ ★

நூல் நயம்

கோழிப் பந்தயம்

காதல் ஆசிரியர் திரு. அரு. ராமநாதன் எழுதிய எட்டுச் சிறுகதைகளின் தொகுப்பு இந்நூல். அரு. ராமநாதனுடைய கதைகள் எப்போதுமே எளிய நடையில் அமைந்திருப்பது இயல்பு. இத்தொகுப்பில் உள்ள ஒவ்வொரு கதையும் சரளமான நடையில் அமைந்திருக்கிறது. 'கோழிப் பந்தயம்' என்ற கதையில் கிராமத்து உரையாடல்களை அப்படியே இயற்கையாக எழுதியுள்ளார் ஆசிரியர். கள்குடியை வைத்துக் காதலையும் கலந்து கதையை ஓடச் செய்திருக்கிறார்.

'அத்தை மகள்' என்ற கதையில் பட்டிக்காட்டுப் பெண்ணை மணக்க மறுத்த பட்டணத்து வாலிபன், பின்னர் அதே பட்டிக்காட்டுப் பெண்ணையே மணந்துகொள்ளும் நிகழ்ச்சியை அழகாகச் சித்தரித்துள்ளார். 'ஐந்தாவது பசி' என்ற கதையில் காதலின் சக்தியைத் தக்க முறையில் நிரூபித்துக் காட்டியிருக்கிறார். தெரு வோரத்தில் உள்ள பிச்சைக்காரியைக் கண்டு கவிஞன், பொன் வியாபாரி, மதபுருஷர், சமதர்மவாதி ஆகிய ஒவ்வொருவரும் தனித்தனியே அணுகுகின்றனர். ஆனால் பிச்சைக்காரி அப்படிச் சபலம் உள்ளவளாக இல்லை. அவளது கணவன் குஷ்டரோகியான குருட்டுப் பிச்சைக்காரன் அந்த நேரத்தில் வருகிறான். கணவனைக் கண்டு ஓடோடிச் செல்கிறாள் அவள். பொன்னையும் பொருளையும் கொடுத்துக் காதலை மாற்றிவிட முடியாது என்பதை இதன்மூலம் எடுத்துக் காட்டுகிறார்.

நல்ல நல்ல கதைகள், கருத்துப் படையல் – எல்லோரும் வாங்கிப் படிக்க வேண்டிய நூல்.

விலை ரூ. 1-4-0

வெளியீட்டோர் : பிரேமா பிரசுரம் சென்னை-26.

◉

கடிகாரம்

இந்நவீனம் 'திராவிட நாடு' இதழில் தொடர் கதையாக வந்த போதே மக்களைக் கவர்ந்திருக்கிறது. தற்போது இதைப் புத்தக ரூபத்தில் வெளியிட்டுள்ளார்கள் பெண்ணாடம் எழில் நிலையத்தார்.

திராவிடநாடு துணையாசிரியர் தோழர் அரங்கண்ணல் எழுதிய நூல் என்றாலே அதிலே சமுதாயத்தின் ஏற்றத் தாழ்வுகள் படம்பிடிக்கப்பட்டுத்தான் இருக்கும். மனித இதயங்களைப் பற்றி அவர் கூறும் தத்துவங்கள் மறுக்க முடியாதவை. இந்த நவீனத்தில் கதை அமைப்பும் நடையும் சிறந்த முறையில் இருக்கின்றன.

மனித வாழ்விலே உலவி வரும் தேளிக்களையும்தேள்களையும் பாம்புகளையும் சித்திரமாக்கிக் காட்டியுள்ளார்ஆசிரியர். போலிவேஷதாரிகள், பசுத்தோல் போர்த்திய புலிகளின் வாழ்க்கை முறையை அம்பலமாக்குகிறார். ஜெயமணி அந்த ரகத்தைச் சேர்ந்தவன். ஆதியிலே விவசாயிகளைத் தூண்டிவிட்டு, மடத்துச் சொத்துக்களைச் சூறையாடிய ஜெயமணி, அதே மடத்தின் 'ஜகத்குருவாக'மாறிய கயவாளித் தன்மையை எடுத்துக்காட்டியிருக்கிறார். வள்ளி, வரதன் போன்ற ஏழைகள் மேட்டுக்குடியினரால் சீரழிவுக்கு ஆளான சோகக்கதையை விளக்குகிறார். காணாமற்போன கடிகாரம் ஒன்றினை வைத்துக்கொண்டு கதையைப் பின்னியிருக்கும் திறத்தைப் பாராட்ட வேண்டும். இந்த நவீனத்தைச் சிறந்த முறையில் அச்சிட்டு வெளியிட்டுள்ள எழில் நிலையத்தாரைப் பாராட்டுகிறோம்.

விலை ரூ. 1-12-0

வெளியீட்டோர் : எழில் நிலையம் பெண்ணாடம், தெ. ஆ மாவட்டம்.

◉

காதல் நினைவு

இந்நூல் ஒரு கவிதைத் தொகுப்பு என்பதை 'கவிதைகள்' என்று அச்சிடப்பட்டிருப்பதன் மூலம்தான் தெரிந்துகொள்ள முடிகிறது. பொதுவாக ஒரு சிலர் கவிதை எழுதுவர். பலர் கவிதா ரசிகர்களாக இருப்பர். இது இயல்பு. ஒவ்வொரு ரசிகனும் கவிதை எழுதவேண்டும் என்று நினைத்து எழுதினால் கவிதை கவிதையாக இருக்கமுடியாது. இந்நூலை எழுதிய கோ. கந்தசாமி அந்த ரகத்தைச் சேர்ந்தவர்தான். அவர் கவிதையெழுதுவதில் இன்னும் பயிற்சி பெறவேண்டும். இத்தொகுப்பில் உள்ள கவிதைகளில் பல,வசன நடையிலே அமைந்திருக்கின்றன. கல்லூரி மாணவி சொல்கிறாள் என்று வைத்துக்கொண்டு கணக்கற்ற ஆங்கிலச் சொற்களைத் தமிழ்க் கவிதையில் கலந்திருக்கிறார். இப்படிக் கலப்பது தமிழ்த் தொண்டு என்று நினைக்கிறார் போலும் இதன் ஆசிரியர். இதற்கு வாழ்த்துரை, முன்னுரை வழங்கிய பெருமக்கள் எந்த அடிப்படையில் வழங்கினார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை.

விலை அணா 8

வெளியீட்டோர்: செந்தா பதிப்பகம் மைலாப்பூர், சென்னை-4

◉

சுதந்திரம்

'ஆனந்த விகடனில்' துணை ஆசிரியராகப் பணிபுரிந்த திரு. கே. அருணாசலத்தை ஆசிரியராகக் கொண்டு வெளிவருகிறது இந்த 'வார இதழ்'. அரசியற் பெருமக்கள், நடிக திலகங்கள் ஆகியோரின் வாழ்த்துரைகளுடன் 'சுதந்திரம்' ஆரம்பமாகியுள்ளது. நல்ல கட்டுரைகள், கதைகள் ஆகியவற்றைத் தாங்கி வெளிவருகிறது இந்த ஏடு. டாக்டர் மு. வ., கு. ராஜவேலு, கி. வா. ஜ. ஆகியோரின் எழுத்தோவியங்கள் இதழை அணி செய்கின்றன. குறைந்த விலைக்கு அதிக பக்கங்களைத் தரும் இதன் ஆசிரியரைப் பாராட்டுகிறோம். தனி இதழின் விலை 3 அணாக்கள். எல்லோரும் வாங்கிப் படிக்கலாம்.

—தமிழ்ப்பித்தன்

ராணி – கலைச்செழியன் திருமணம்

திராவிட முன்னேற்றக் கழகத் துணைப்பொதுச்செயலாளர் என்.வீ. நடராசன் அவர்களது குமாரத்தி செல்வி ராணிக்கும்—திரு. ஞாயிறு ராசா அவர்களின் குமாரர் செல்வன் கலைச் செழியனுக்கும், 15-4-56 காலை 9 மணியளவில், சென்னை—வண்ணையம்பதி தியாகராயர் கல்லூரிக் கலாமண்டபத்தில் அண்ணா அவர்கள் தலைமையில், திருமணம் சீரும் சிறப்புடனும் நடந்தேறியது.

அண்ணா அவர்கள் மணவிழாவுக்குத் தலைமை தாங்கி நடத்திக் கொடுக்கும்படி தோழர் என். வி. நடராசன் அவர்கள் கேட்டுக் கொண்டார்; அதனை, சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் இளம்பரிதி வழிமொழிந்தார்.

அண்ணா அவர்கள் சீர்திருத்தத் திருமணம் குறித்துச் சிறிது நேரம் உரையாற்றிய பின்னர், மணமக்களாகிய ராணி—கலைச் செழியன் ஆகியோரிடம் உறுதி மொழிப் பத்திரத்தைக் கொடுத்துப் படிக்கச் செய்தார். பின்னர் நீண்டநேர ஆரவாரத்திற்கிடையே மணமக்கள் மலர் மாலைகளை மாற்றிக்கொண்டனர்.

அடுத்து, தமிழகத்தின் பெரும் பண்பாளர் திரு. பி. டி. இராசன், எம். எல். ஏ. அவர்கள் மணமக்களை வாழ்த்திப் பேசினார்.

தொடர்ந்து தோழர்கள், சின்ன அண்ணாமலை, கவி கா. மு. ஷெரீப், ஜி. உமாபதி, பேராசிரியர் மயிலை-சிவமுத்து, பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார், டி. சண்முகம் எம். எல். ஏ., ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., என். ஜீவரத்தினம், கே. கோவிந்தசாமி, காஞ்சி-கல்யாணசுந்தரம், முகவை-ஆர். எஸ். பாண்டியன், நடிப்பு-இசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், பேபி கந்தசாமி, எம். பி, இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன், தோழியர் சத்திய வாணி முத்து, அருண்மொழி, இரே. இளம்வழுதி, சி. பி. சிற்றரசு, க. அன்பழகன், சே. ஏ. மதியழகன், ஈ. வெ. கி. சம்பத், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினார்கள்.

வாழ்த்துரை வழங்கும் நிகழ்ச்சிக்கு இடை இடையே இசைச் செல்வி கஸ்தூரி அவர்களின் இசை விருந்தும், இசை முரசு நாகூர் அனிபா அவர்களது இன்னிசையும், நாட்டிய ஆசிரியர் ராகவய்யா (பிள்ளை) அவர்களின் மாணவிகளான ராணி—ரமணி சகோதரிகளின் நாட்டியமும் நடைபெற்றன.

இறுதியாக அறிஞர் அண்ணா அவர்கள் தனது முடிவுரையில் மணமக்களை வாழ்த்தியும், பாராட்டியும் பேசினார்.

மணமக்களுக்கு ஏராளமான வாழ்த்துப் பத்திரங்களும், பாராட்டிதழ்களும், மலர் மாலைகளும், அன்பளிப்புகளும், கழகத் தோழர்களாலும், உறவினர்களாலும், அளிக்கப்பட்டன.

என். வி. நடராசன் அவர்கள் நன்றி கூறலுடன் மண விழா இனிது முடிவுற்றது.

மண விழாவிற்கு, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த கழகத் தோழர்களும், நிர்வாகிகளும், மற்றும் நகரில் உள்ள நண்பர்களும் வந்திருந்து சிறப்பித்தனர்.

பல தோழர்கள் திருமண விழாவிற்கு வர முடியாமைக்கு அறிவித்தும், மணமக்களை வாழ்த்தியும் செய்தி அனுப்பியிருந்தார்கள்.

தோழர்கள் கே. எம். கண்ணபிரான், இளம்பரிதி, சேதுராசன், ஆகியோரும்மற்றசென்னைத்தோழர்களும்தோழியர்கள்அலமேலு அப்பாதுரை அம்மையார், கமலா பாலசுந்தரம் ஆகியோரும் உடனிருந்து திருமண விழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்து சிறப்பித்தனர்.

தென்றலில்

தென்னரசு

எழுதும்

'தலைவன் வாழ்க'

அண்ணாவின் தனித்தன்மைகள் பற்றிய

தொடர் கட்டுரை

விரைவில் ஆரம்பமாகும்.

காரைக்குடி

செல்வி பதிப்பகத்தின் சுவையான நூல்கள்

மா. இராசமாணிக்கனார்	
திருவள்ளுவர் காலம் யாது ?	ரூ. 1 0 0
தமிழர் திருமணத்தில் தாலி	,, 1 8 0
தமிழ்மொழிச் செல்வம்	,, 1 8 0
சைவ சமயம்	,, 2 4 0
தமிழண்ணல்	
தாலாட்டு	,, 2 0 0
மொழிவழிச் சிந்தனைகள்	,, 1 4 0

மற்றும் அறிஞர் பெருமக்களின் எல்லா நூல்களும் கிடைக்கும்.

செல்வி பதிப்பகம்,

காரைக்குடி.

★ அன்னை அருங்குறள் ! ★

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை, எம். ஏ., எல். டி.

— சென்ற இதழ்த் தொடர்ச்சி —

7. தாய் துயில்

சான்ற மகவின் தனித்துயர்தீர்த் தாள் துயிலால்
ஈன்றஇயன் மாது இணைந்து

தன்பதைப்பும் மக்கள் பதைப்பும் தருதுயிலால்
மன்பதைப்பும் நாணுள் மனத்து

நின்றான் நெடுமால் குமரி நிலையழிந்தாள்
குன்றுள் குலைவிற் குலைந்து

மைந்தர் மதியிழந்தார் மங்கையர் உள்ளழிந்தார்
பைந்தமிழ்த் தாய்நிலை பார்த்து

உற்றநெடும் போர்க்கு உடையார் உடைந்தார்
பற்றலர் பற்றினிற் பட்டு

அயலா ரிசையே அரிதென்று அயலரசின்
மயலால் உரைத்தார் மகிழ்ந்து

தெலுங்கிசை முன்னேங்கு தீந்தமி ழின்னிசை
தெலுங்கிசை ஆங்கொலோ செப்பு

வாழா மொழியோ மறைமொழியோ பேணிஎன்றும்
வாழுமொழி மறுத்தார் மற்று

உரிமைப் பெருமக்கள் ஓங்குதமிழ் முழக்கம்
தருமால் துயில்விழிப்பெம் தாய்க்கு

8. தாய்ப் பணி

அன்பார் அமுதெம் அருந்தமிழ் அஃதுண்ணார்
இன்பார் அமுதெய்தல் இன்று

அன்பின் வழியதுலகம் இங்கு அஃதிலார்
"வன்பு" வழிநீக்கி வாழ்

பண்டைப் பெருமையும் ஒப்பில தென்னக்
கண்டு களிப்பள் கனித்து

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என உரைத்தான்
சிறப்பிற் சிறப்பேம் செயல்

மாற்றா ரிடையே மயங்கிநின்ற அன்னையினைத்
தேற்றுஞ் சிறுசேய் முகம்

தமிழ ரிடையே தனிவகுப்புக் காண்பார்
அமிழ்க அருநரகில் ஆழ்ந்து

உடல்நோய் ஒழிக்கும் உயர்மருந் தானார்
கடல்கடந்து வந்தார் கலந்து

போப்பையர் வீரை முனிவர் புகழ்நீலர்
தாய்ப்பணி பூண்டார் தளைந்து

நன்மக்கள் போன்ற(ன்)னை மன் மக்கள் கொண்டாள்
வன்மக்கள் புன்மை மறந்து

8. தமிழ்ப் பெண்டிர்

மன்னர் மகுடம் வணங்கவரும் திருவே
தென்னவர் வணங்கலேனே செப்பு

தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழு தெழுவாள்
தெய்வம் கொழுநற்கும் தேர்

சாதல் விலைகூறிச் சாவா மருந்தளிக்கும்
காதல் தமிழ்ப்பெண்டிர் கண்

தன்னிறை காத்துத் தலைவன் நிறையினையும்
தன்னதாக் காப்பள் தகை

மானார் விழிபட் டிலரேல் தமிழ்மைந்தர்
ஏனோர் வழிபட் டிலார்

மையலால் நைந்தார் வடுஅற மென்சொலால்
தையலர் ஆயினர் தைத்து

வேலற்று வாளற்றுக் கோளற்றார்க்கு உண்டிவண்
வேலொடு வாள்தரு கோள்

வேளாத பார்ப்பார் வினைவயப் பட்டார்க்கு
வாளாவள் வண்டமிழ் மாது

தற்பற் றலாற்பிறபற் றற்றார் பற்றுவர்
கற்பற்ற கன்னியர் பற்று

10. தமிழ் வீறு

அரனா டியதும் அருமறலி காய்ந்ததுவும்
உரனார் தமிழ் நாடு உரை

மண்டல மாண்ட மன்னன் இராமன் கண்ணன்
கொண்டல் வணமே குறி

பண்டைக் குமரியர் கொண்ட வடமலையே
எண்டோ ளிருந்த தெனல்

மலையரசு மாமலையம் ஆண்டவழுதி; அ(ன்)னை
மலைமகளும் அன்னான் மகள்

முக்கண்ணான் முக்கணால் சுட்டு முச்சுட்டும்
முத்தமிழ்க் கண்ணே உள

வலங்கொண் டெழுந்த வெற்றிவலயம் எனும்சொல்
வலங்கொள் தமிழே மதி

ஓங்காரம் ஓங்கல் விலங்காய் அமைந்ததுவும்
பாங்கான தீந்தமிழ் பார்

ஐம்பெரும் பூதத்து அமைவே உலகு; அனைத்தே
ஐந்திணைப் பட்ட தமிழ்

கடந்த அதனைக் கடவுள் எனக்கொண்ட
திடம்பேணுவார் அறிஞர் தேர்ந்து

11. பள்ளி எழுச்சி

கலையார் திருவே யனையாய்நின் கண் கள்துயில்
கலையா எழுவாய் கனிந்து

இளையேம் பிழையால் இதயநொந்து சோர்ந்தாயோ
விளைவே துரையாய் விரைந்து

மாந்தளிர்க் கையால் வளைத்தெடுத்த பொன்மேனி
சோர்ந்து துவள்தல் எவன் ?

ஒற்றுமைப் பட்டேம் ஒளிந்துறை தன்னலம்
பற்றற நீத்தேம் பரிந்து

மேல்வான் விழுமிள ஞாயிறு கீழ்வான்
பால்வார்த் தொளிருதல் பார்

பிறப்பால் அறிவால் ஆற்றலால் வேற்றுமை
அறப்பெற நின்றேம் அருள்

குறிப்பறி கொள்கைக் குமரர்கள் நின்றேம்
விழித்தெமை யாட்கொள் விரைந்து

நிறவேற் றுமை செய் நிறையிருள் நீங்கி
இறைஈண்டு எழநின் எழில்

சிறியேம் பிழைகள் பொறுப்பாய் சிறுகுதலை
மொழிகேட் டெழுவாய் முனைந்து

12. தமிழ் வாழ்க

மீனுறு வானில் விரிந்து புகழ்வான்
தானுற வாழ்க தமிழ்

அடல்புலி வில்மீன் அமைந்த தமிழ்க்கொடி
கடல் நிலம் காலாள் குறி

காடார் திருப்புலி; கடலார் திருமீன்;
பாடார் திருவிற் படும்

சோனாட்டு நெற்குத் தொல்பாண்டி முத்தளிப்பம்
வேணாட் டகிற்கும் விழைந்து

தொண்டை நன்னாடும் துணைக் கோங்கநாடும்
கொண்டரசாள்வெம் குறித்து

அண்டை அரசும் அனைதமிழ் சாரரசும்
மண்டலம் கொள்வேம் மதித்து

முச்சங்கம் எங்கும் வளர்ப்போம் முனைந்துதமிழ்
எச்சந்தினும் நிலவ என்று

பழகு உலகெலாம் பைந்தமிழ் நாடக்
கழகம் வளர்ப்போம் கலந்து

கலையார் உயிர்நல் இயலின் கருஎன்னும்
நிலையார்க நீள்தமிழ் நின்று

வெண்பாப் போட்டி

27. காதல் வெண்பா

வெண்பாப் போட்டி 27ன் பரிசு பெற்ற வெண்பாவையும் பிரசுரத்திற்குத் தகுதியுள்ள வெண்பாக்கள் சிலவற்றையும் இந்த இதழில் வெளியிட்டுள்ளோம். மீதமுள்ளவை அடுத்த இதழில் வெளியாகும்.

★ கொம்பேறிச் சுற்றும் கொடித்தன்மை பெற்றவளே
அம்பெய்தா யுன்றன் அனல்விழியால்-வெம்காதல்
வாட்டுகின்ற காரணத்தால் வண்டார் குழலுன்னைத்
தீட்டுகின்றேன் ஓவியமாய்த் தேர்ந்து.

—வெண்ணெய்வேலன், திருவெண்ணெய் நல்லூர்.

★

ஆடி வருந் தென்றலென் ஆடையினைத் தொட்டிழுக்க,
கூடவருந் தோழனென்று கோணிநின்று-ஊடினேன்
பாவியெனை அத்தென்றல் பார்த்துச் சிரித்ததுயென்
ஆவியவர் இல்லை அவண்.

—சவ்வாது, கயற்கண்ணிபுரம்.

★

நுங்குதரும் சொல்போல்வாய் ! நன்னுதலே ! நங்காய்!
செங்கனிவாய் முத்தத் தேன்சொரியும்-எங்கோன்
ஏன்காணேம் இன்னும்? ஏந்திழையே ! என்பால்
தான்கொண்ட துண்டோ, சினம்?

—ந. இரகுராசன், சென்னை-5.

★

முன்கை வளைநெகிழ மொய்யெழில் சீர்சிதையும்
மின்னேர் இடைதுவள மெய்மயங்கும்-நன்னுதலே
வெந்தழல் கானகத்து வேல்துணையாய் சென்றஇறை
வந்தால் உளதென் உயிர்.

—ந. பத்மநாபன், பென்னகர்.

★

வாள்முனைக்(கு) அஞ்சாத வன்றோளன் வெல்பகையைத்
தாள்பணிய வைக்கும் தகையுடையோன்-கேள்சகியே
கூர்விழியாள் தாக்கக் குறிப்பிழந்த அவ்வீரன்
சோர்வடைந்து போனதேன் சொல்.

—சி. பி. சாமி, திருப்பத்தூர்.

★

தொட்டால் துவளும் துடியிடையே ! உன்றனிடை
மட்டான இன்பமோ உண்டுசொல்?-கட்டுடலாய் !
தட்டாமல் என்றனுடைச் சொல்லேற்றுத் தாட்டிகமாய்
இட்டமுடன் வந்திடுவாய் இன்று.

—அலை, சித்தாத்தூர்.

★

கட்டிக் கரும்பிருக்கக் காலனுல கிற்கனுப்பும்
எட்டிக் கனிதன்னை ஏற்பரோ?-கட்டிய
மதிமுகத்தாள் நீயிருக்க மாற்றான் இல்லாளை
மதிப்பேனோ நற்றமிழன் நான்.

—வெ. கு. வெங்கடேசன், சிதம்பரம்.

★

விற்படையும் வாட்படையும் வென்றிகொள் தேர்ப்படையும்
கற்றிறம் வாய்ந்த கரிப்படையும்-பெற்றவனே !
தோட்படை யொன்றே துணையெனக்கொள் தோழரிடம்
ஆட்பட்ட வாறுயெவ் வாறு?

—செல்வதாசன், சென்னை 1.

★

உண்ணென்றாய்! தீங்கனியைத் தின்னென்றாய்! ஓ, தோழி!
தண்ணின்பம் தந்திடுமென் காதலர்-பண்ணிசைசேர்
தீங்கனிபால் எம்மட்டோ ! தேனத்தான் வாயமுதே
தாங்கிடுமென் நல்லுயிரைத் தான்.

—பி. தேவ அரசு, திருச்சி.

★

அன்பின் திருஉருவம் அயல்காடு சென்றிட்டார்
என்செய்வேன் தோழீ இயம்பாய்-மென்மேலும்
ஏங்குதலா லிளைத்துவரும் எனதுடம்பு ஞாலத்தில்
தாங்கிடுமோ இவ்வுயிரைச் சற்று.

—கு. பழநிசாமி, ஊத்துப்பட்டி.

வெஞ்சமரில் வென்றே விருதுபெற வந்தபோதென்
நெஞ்சுயர விம்மும் நிலைகண்டும்-கொஞ்சமேனும்
வஞ்சமிலார் போற்சென்றார் வந்துவிரைந் தந்திியிலே
கொஞ்சுதல்கூ தாகுமோடீ கூறு.

—க. வீரபத்ரன், காளம்பாளையம்.

★

மின்னால் தமிழழகன் மன்மார்பில் சாய்ந்தென்றன்
கன்னல் இதழைக் களித்துண்டு-மன்னுகுறள்
இன்பத்துப் பாலை இழைத்தூட்ட உண்டதனால்
இன்பம் மயக்குதடி இன்று.

—தமிழ்த்தேவன், வேலூர்.

★

முத்துங் கரிப்பல்லும் மாமயிலும் சந்தனமும்
சந்து மிகுமிளகு தேனெனவே-கந்துகடல்
தாண்டக் கலஞ்செலுதாம் தோழிஅவர், சென்றால்நீ
வேண்டித் தடுத்தே விடு.

—அ. இரத்தினசாமி, கோவிலூர்.

★

மான்போன்ற கண்ணாள் மலர்போன்ற மேனியாள்
தேன்போன்ற சொல்லாளே செல்வா-வான்போன்ற
இடையை யுடையா ளென்றன் உயிர்க்கு
மடையை யுடையாளம் மாது

—அ. ந. கிருஷ்ணசாமி, பூண்டுலோயா.

★

எல்லையிலா என்காதல் பெட்டகமே நீயெனக்குக்
கொல்லைக் கொடிபூத்த முல்லையென்றேன்-பல்லிளிக்கும்
கள்ளிப்பூ காகிதப்பூ கண்டோர்க்கு முல்லைப்பூ
என்னிடம்போ என்றாள் இழிந்து.

—வள்ளுவனடிப்பொடி, வேம்பன்பட்டி.

★

வட்டநி லாக்குளிராம் வண்ணப்பூ தன்மணமாம்
தொட்டால் துவளுமென்றார் தோகையே-இட்டமுடன்
கூடிக் குலவியே கொஞ்சுமொழி சிந்துமவர்
நாடி வரக்காணேன் நான்.

—இரா. இளங்கவி, கண்டர்கோட்டை.

★

பழரசமும் பாலும் பலசுவை யூணும்
முழுமதியும் மென்மலர்மெத் தையும்-எழிற்றோழீ !
திண்தோள் வலியன்பர் செல்வமுகங் காணாமல்
என்மனத்(கு) ஆகும் கசப்பு.

—ச. குருசாமி, சத்திரப்பட்டி.

★

மானே மதியே மதுகரம் வாய்மடுக்கும்
தேனே திருமகளே தீண்டெனலும்-கூன்பிறையே !
கண்கள் மிரட்டியவோ கண்ட களங்கமுறை?
பெண்ணழிந்தாள் என்றேன் பெயர்ந்து.

—இளங்கோவன், இளங்காடு.

★

வண்ணமலர்க் காவில் வரவேண்டு மென்றுரைத்தா
ரின்னகால மென்றுரைக்க ஏன்மறந்தார்?-அன்னமேநின்
கண்மயக்கா லெப்போதுங் காவிடை வீழ்ந்துளான்!கள்
ளுண்ணவுமோர் காலமுண்டோ ஓது.

—வீ. தென்னவன், ஆர்க்காடு.

★

செந்தா மரையொத்த சேயிழையே உன்முகந்தான்
வெண்டா மரையான விதஞ்சொல்-அந்தமிகும்
கருங்கூந்தல் கண்மைதான் கலைவானேன் தலைவனுடைக்
குறும்புத்தன மோநீ கூறு.

—வ. பெ. ராமசாமி, வடமட்டம்.

★

வளியால் துவளும் வளங்கெழு முல்லை
அளியால் இளமை லணைத்தோன்-ஒளிசேர்
கலைமுகத்தோய் ! நல்லவன் காணேன் றுணர்த்தும்
நிலையிழந்த வென்னிள நெஞ்சு.

—கு. வே. இராமகோடி, சென்னை-7.

★

ஊனுறக்க மேற்கொள்ளா தொண்டொடியே
நான்வருந்தித்
தண்ணூட்டும் மேனி தகர்ந்திடலை-என்றனுக்குக்
கூடிக் களிப்பூட்டும் கொற்றவனின் சேட்சேறல்
நாடிப் பயக்குமையம்.

—சொ. சேது, வெற்றியூர்.

★ பரிசுபெற்ற வெண்பா—பரிசு, ஓராண்டு 'தேன்றல்' சந்தா.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6.